

Australian Government

# அவுஸ்திரேலியக் குடியுரிமை

## நம்மிடையே உள்ள பொதுப்பிணைப்பு



அவுஸ்திரேலியக் குடியுரிமைப் பரீட்சைக்கு நீங்கள் தேரற்றத் தேவைப்படும் அனைத்துத் தகவல்களும் இந்த நூலில் அடங்கியுள்ளன. இக்குடியரிமைப் பரீட்சையில் தேர்ச்சியடைவதற்காக வேறு எந்தத் தனி நபரிடமிருந்தோ அல்லது அமைப்புக்களிடமிருந்தோ குடியுரிமைப் பரீட்சைப் பொதிகள் எதனையும் நீங்கள் வாங்கத் தேவையில்லை. குடியுரிமைப் பரீட்சையில் தேர்ச்சி பெற உங்களுக்கு உதவுவதாய்க் கோரும் எந்தப் பொதியையும் திணைக்களம் ஏற்றுக்கொள்ளவோ அல்லது பரிந்துரைக்கவோ இல்லை.

© Commonwealth of Australia 2020

Commonwealth Coat of Arms –க்கு விலக்களிப்பதோடு, இந்தப் பிரசுரத்தில் இருக்கிற அனைத்துச் செய்திகளையும், https://creativecommons.org/licenses/by/4.0/legalcode இல் பெற்ற Creative Commons Attribution 4.0 International உரிமத்தின் கீழேயே தந்துள்ளோம்.

இதன் பொருள், இந்த ஆவணத்தில் அமைத்துள்ளபடியான செய்திகளுக்கு மட்டுமே இந்த உரிமம் பொருந்துகிறது என்பதேயாகும்.

உரிய உரிம நிபந்தனைகள் குறித்த விவரங்களை, Creative Commons இணையதளமான https://creativecommons.org/ இல் கிடைக்கிறது, இதுவே https://creativecommons.org/licenses/by/4.0/legalcode இல் கிடைக்கிற CC BY 4.0 உரிமத்திற்கான முழு சட்டப்பூர்வ விதியாகும்.

**Coat of Arms ஐ உபயோகித்தல்**
எந்தெந்த நிபந்தனைகளின் கீழ் Coat of Arms களை உபயோகிக்கலாம் என்பதை பிரம் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துறையின் இணையதளமான— https://www.pmc.gov.au/government/commonwealth-coat-arms-இல் விவரித்துள்ளோம்.

**எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்**
இந்த உரிமம் மற்றும் இந்த ஆவணத்தை உபயோகிப்பது சம்பந்தமான விசாரணைகள் எவற்றையும் வரவேற்கிறோம்:

Portfolio Media and Engagement Branch
Department of Home Affairs
PO Box 25
BELCONNEN ACT 2616

**மறுப்புக்கூற்று**
இறந்து போனோர் சம்பந்தப்பட்ட படங்கள் மற்றும்/அல்லது விடயங்கள் இந்த வெளியீட்டில் இடம் பெற்றுள்ளன என்றுஅவுஸ்திரேலியப் பூர்வீகக் குடியினர் மற்றும் டாரிஸ் நீர்ச்சந்தித் தீவகத்தினர் எச்சரிக்கப்படுகின்றனர்.

# உள்ளடக்கங்கள்

உங்களுக்கோர் செய்தி 2

பரீட்சைக்கான பகுதி

பகுதி 1: அவுஸ்திரேலியாவும் அதன் மக்களும் 7

பகுதி 2: அவுஸ்திரேலியாவினது ஜனநாயக நம்பிக்கைகள், உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் 17

பகுதி 3: அவுஸ்திரேலிய அரசாங்கமும் அதன் சட்டங்களும் 23

பகுதி 4: அவுஸ்திரேலிய மதிப்புகள் 33

பரீட்சைப் பகுதிக்கான சொற்களஞ்சியம் 40

பயிற்சிப் பரீட்சை வினாக்கள் 44

பரீட்சைக்கு அப்பாற்பட்ட பகுதி

பகுதி 5: இன்றைய அவுஸ்திரேலியா 48

பகுதி 6: நமது அவுஸ்திரேலிய வரலாறு 63

பரீட்சைக்கு அப்பாற்பட்ட பகுதிக்கான சொற்களஞ்சியம் 84

மேலதிகத் தகவல்களுக்கு 86

நன்றி நவிலல்கள் 88

# உங்களுக்கோர் செய்தி

அவுஸ்திரேலியக் குடிமகனாக வேண்டுமென்று நீங்கள் முடிவு செய்தமைக்கு எமது வாழ்த்துக்கள். புதிய ஒரு நாட்டில் வாழ்வதற்கும், அந்த நாட்டின் குடிமகன் என்ற முறையில் முழுப் பங்கேற்பதற்கும் தைரியமும், முயற்சியும், பற்றுறுதியும் தேவை. எங்களது அமைதியான, ஜனநாயக சமூகத்திற்கு நீங்கள் ஆற்றும் பங்களிப்பினை நாங்கள் போற்றுகிறோம்.

அவுஸ்திரேலியக் குடியுரிமை என்பது உங்களது புலம்பெயர்வுப் பாதையில் ஒரு முக்கியமான கட்டமாகும். அவுஸ்திரேலியக் குடிமகனாவதென்பது அவுஸ்திரேலிய நாட்டையும் இந்த நாட்டின் விழுமியங்களையும் தொடர்ந்து மதித்துக் காப்பதற்கான பற்றுறுதியை நீங்கள் மேற்கொள்கிறீர்கள் என்றே பொருளாகும். அத்தோடு அவுஸ்திரேலிய சமூகத்தினுல் ஒரு முறைப்படியான அங்கத்துவம் பெறுவதற்கான ஆரம்பமுமாகும். 'நான் ஒரு அவுஸ்திரேலியன்' என்று பெருமிதமாக நீங்கள் சொல்வதற்கு வழி வகுக்கும் படிதான் இது.

அவுஸ்திரேலியக் குடியுரிமை என்பது பெரும் பலன்களை வழங்கவல்லதோர் சிறப்புரிமையாகும். அவுஸ்திரேலியக் குடிமகனாவதன் மூலம் நீங்கள் தனித்துவம் வாய்ந்த ஒரு தேசிய சமூகத்தினருடன் ஒன்றிணைகின்றீர்கள். நமது பூர்வீகக் குடிமக்கள், பிரிட்டனில் இருந்து நாம் சுவீகரித்த ஜனநாயக அமைப்புகள் மற்றும் உலகெங்கும் இருந்து பின்னர் வந்த மக்கள் ஆகியோரது இணைந்த பங்களிப்புகளினாலேயே நமது நாடு நிறுவப்பட்டுள்ளது. நமது பரந்துபட்ட தன்மையை நாம் கொண்டாடும் அதே வேளையில், ஒருமித்தமான, ஒற்றுமைமிக்க தேசமாக திகழவும் நாம் பாடுபடுகிறோம்.

நமது பிரச்சினைகளைத் தீர்க்க நாம் இணைவாக முயல்கிறோம் என்பதையும், இப்படிப்பட்டதோர் மாபெரும் நாடாக, அவுஸ்திரேலயா உருவாக நாமனைவரும் உழைக்கிறோம் என்பதையுமே அவுஸ்திரேலிய சமூகத்தினரது வலிமை காட்டுகிறது. நம்மிடையே நிலையானதோர் ஆட்சி அமைப்பு இருக்கிறது, அதோடு அவுஸ்திரேலியாவில் வசிப்போர் அரசின் அதிகாரத்தையும் சட்டங்களையும் மதித்து நடக்கிறார்கள். நமது நிலைப்புத்தன்மை, நமது கலாச்சாரம் மற்றும் நமது சட்டங்கள் ஆகியவை நமது வரலாற்றில் இருந்து உருப்பெற்றவையாகும். அவுஸ்திரேலிய சமூகத்தினரோடு சங்கமிப்பதன் மூலமாக, நீங்கள் அவுஸ்திரேலியாவின் வரலாற்றோடு இன்னும் கொஞ்சம் கூட்டி, அதை உருவாக்க உதவும் ஒரு நிலையில் இருப்பீர்கள்.

அவுஸ்திரேலியா ஓர் பண்டைய நாடாகும். இது பாரியதும் தனித்துவமும் வாய்ந்தது. இது பசுமையான மழைக்காடுகளும், வனங்களும் நிறைந்த நாடாகும் பொன்னிறக் கடற்கரைகளும், வரண்ட பாலைகளும் இங்குண்டு. நம் பூர்வீகக் குடிகளது கலாச்சாரங்கள் உலகின் மிகப் பழைய, தொடர்ந்திருக்கின்ற கலாச்சாரங்களாகும். நாம் புலம்பெயர்ந்து வந்தவர்களால் நிர்மாணிக்கப்பட்டதோர் இளைய தேசமும் ஆவோம். அவுஸ்திரேலியாவில் ஐரோப்பியக் குடியமர்வு 1788-ஆம் ஆண்டு தொடங்கியது, நாம் தொடர்ந்தும் புதிதாய்ப் புலம் பெயர்வோரை வரவேற்கிறோம்.

200-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்துள்ளோர் அவுஸ்திரேலியாவைத் தம் இல்லமாக்கிக் கொண்டுள்ளனர். இதன் விளைவாக, உலகின் மிகப் பரந்துபட்ட சமூகங்களில் ஒன்றாக நமது சமூகம் திகழ்கிறது. பல இனத்தினரையும், பல கலாச்சாரத்தினரையும் தேசிய ஒருமைப்பாட்டுடன் அவுஸ்திரேலியா வெற்றிகரமாய் இணைவாக்குகிறது. குடியுரிமை என்ற பிணைப்பே எம்மனைவரையும் ஒன்றிணைக்கிறது.

அவுஸ்திரேலியா ஒரு ஜனநாயக நாடாகும். எமது ஜனநாயக நாட்டை நிர்மானிக்கும் பணியில் முழுப் பங்கேற்கும் வாய்ப்பினை குடியுரிமை உங்களுக்கு வழங்குகிறது. அவுஸ்திரேலிய சமூகத்தினரின் சம்பிரதாயப்படியான ஒரு அங்கத்தினர் என்ற முறையில் உங்களது பொறுப்புக்களை நிறைவேற்ற நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்கள் என்பதையே இது குறிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் கௌரவம் மற்றும் சுதந்திரம், ஆடவர் மற்றும் மகளிரது சமத்துவம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றில் அவுஸ்திரேலியர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அவுஸ்திரேலியக் குடியுரிமை என்பது உங்கள் அன்றாட வாழ்வில் இப்பெறுமானங்களை நீங்கள் கடைப்பிடிப்பதையே குறிக்கிறது.

# அவுஸ்திரேலியக் குடிமகனாகுதல்

அவுஸ்திரேலியக் குடிமகனாகுதல் என்பது ஒரு முக்கியமான நடைமுறையாகும், இதில் ஒருவர் தனது விசுவாசத்தை அவுஸ்திரேலியாவிற்கும், அதன் மக்களுக்கும் உறுதிமொழியளிக்கிறார் அதன்பின் அவர் நமது நாட்டின் ஒரு குடிமகனாக அவரது உரிமைளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றக் உரிமையுள்ளவராகிறார்.

## அவுஸ்திரேலியக் குடியுரிமைப் பரீட்சை

அவுஸ்திரேலியாவைப் பற்றியும், அதனது ஜனநாயக அமைப்பு, நம்பிக்கைகள் மற்றும் மதிப்புகள், மற்றும் குடியுரிமையின் பொறுப்புகள் மற்றும் சுதந்திரங்கள் குறித்தும் போதிய அறிவு உங்களுக்கு உண்டா என மதிப்பிடும் வகையில் 'அவுஸ்திரேலியக் குடியுரிமைப் பரீட்சை' வடிவமைக்கப்பட்டுள்ளது.

'குடியுரிமைப் பரீட்சை' என்பது நீங்கள் ஆங்கில மொழியில் இருக்கும், கணினியில் மேற்கொள்ளும் 'பல விருப்பத் தெரிவு' கொண்ட பரீட்சை ஆகும். இதில் தற்போக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 கேள்விகள் இருக்கின்றன. 15 நவம்பர் 2020 அன்றின்படி, இதில் அவுஸ்திரேலிய மதிப்புகள் குறித்த ஐந்து கேள்விகளும் அடங்கும்.

இந்தப் பரீட்சையில் தேர்ச்சியடைவதற்கு, மதிப்புகள் குறித்த அனைத்து ஐந்து கேள்விகளுக்கும் நீங்கள் சரியாகப் பதிலளித்து, ஒட்டுமொத்தமாகக் குறைந்தது 75 சதவீத மதிப்பெண் பெற்றாக வேண்டும்.

குடியுரிமைச் பரீட்சைகளை, அவுஸ்திரேலியா எங்கிலுமுள்ள உள்துறை அமைச்சகத் துறை அலுவலகங்களில் நடத்துகிறார்கள். அவுஸ்திரேலியா நெடுகிலும் உள்ளகப் பகுதிகளில் பல இடங்களிலும், வெளிநாடுகளிலுள்ள சில தூதரகங்களிலும் இப்பரீட்சைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அவுஸ்திரேலியக் குடியுரிமைப் பரீட்சைக்கு ஆயத்தமாதல்

குடியுரிமைப் பரீட்சைக்கு உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள நீங்கள், *அவுஸ்திரேலியக் குடியுரிமை: நமது பொதுப் பிணைப்பு: என்ற மூலவளப் புத்தகத்தினைப் படிக்க வேண்டும்:*

இந்த புத்தகத்தில், பரீட்சை செய்யக்கூடிய பகுதியும், பரீட்சைக்கு அப்பாற்பட்ட பகுதியும் உள்ளன.

### பரீட்சை செய்யக்கூடிய பகுதி

குடியுரிமைப் பரீட்சையில் தேர்ச்சியடைய நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்துத் தகவல்களும் இந்த நூலின் முதல் நான்கு பாகங்களில் உள்ளன:

- பகுதி 1 – அவுஸ்திரேலியாவும் அதன் மக்களும்
- பகுதி 2 – அவுஸ்திரேலியாவின் ஜனநாயக நம்பிக்கைகள், உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள்
- பகுதி 3 – அவுஸ்திரேலிய அரசாங்கமும் அதன் சட்டங்களும்
- பகுதி 4 – அவுஸ்திரேலிய மதிப்புகள்

குடியுரிமைப் பரீட்சையில் இருக்கும் வினாக்களுக்கு விடையளிக்க இந்த பரீட்சை செய்யக் கூடிய பகுதியிலுள்ள விடயங்களை நீங்கள் தெரிந்தும், புரிந்தும் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

### பரீட்சைக்கு அப்பாற்பட்ட பகுதி

பரீட்சைக்கு அப்பாற்பட்ட பகுதியில், அவுஸ்திரேலியாவின் வரலாறு மற்றும் கலாச்சாரத்தினைப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவும் முக்கியமாக தகவல்கள் உள்ளன. இந்தத் தகவல்களில் உங்களுக்குப் பரீட்சை இருக்காது.

- பகுதி 5 – இன்றைய அவுஸ்திரேலியா
- பகுதி 6 – நமது அவுஸ்திரேலிய வரலாறு

### பயிற்சி வினாக்கள்

பரீட்சைசெய்யக் கூடிய பகுதியின் இறுதியில், குடியுரிமைச் பரீட்சைக்கு உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ள உதவும் பொருட்டு, 20 பயிற்சி வினாக்கள் இருக்கின்றன.

### அருஞ்சொற்பொருள் பட்டியல்

பரீட்சை செய்யக் கூடிய பகுதி மற்றும் பரீட்சைக்கு அப்பாற்பட்ட பட்தி இரண்டின் முடிவிலும் அருஞ்சொற்பொருள் பட்டியல் (பிரதான சொற்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்கள்) ஒன்று உள்ளது.

### மேலதிகத் தகவல்கள்

மூலவளப் புத்தகத்தின் பின்பக்கத்தில், மேலதிகத் தகவல்களை எங்கு பெறுவது என்பது குறித்த ஆலோசனை இருப்பதை நீங்கள் காணலாம்.

### குடியுரிமைப் பரீட்சை நடைபெறும் போது உதவி

அவுஸ்திரேலியக் குடிமக்கள் அந்தஸ்தினைப் பெற இருக்கும் பெரும்பாலானவர்களுக்கு, உதவி ஏதும் இல்லாமலேயே இக்குடியுரிமைப் பரீட்சையை நிறைவு செய்வதற்குத் தேவையான கல்வித் திறன்கள் இருக்கும் எனவே எதிர்பார்க்கிறோம். நீங்கள் கேள்விகளையும், பதில் வாய்ப்புகளையும் படிக்கக் கேட்க உபயோகிக்கக்கூடிய, எழுத்திலிருந்து-பேச்சுக்கான தொழில்நுட்பமும் கிடைக்கிறது.

### அவுஸ்திரேலியக் குடியுரிமைப் பரீட்சைக்குப் பிறகு

நீங்கள் இப்பரீட்சையில் தேர்ச்சியடைகிற பட்சத்தில், நாங்கள் தொடர்ந்து உங்கள் விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுப்போம். உங்களது விண்ணப்பத்தை அங்கீகரித்து, நீங்கள் குடியுரிமைச் சடங்கில் கலந்து கொள்ள வேண்டியிருந்தால், அச்சடங்கில் கலந்து கொள்வதற்கான அழைப்புக் கடிதம் ஒன்று உங்களுக்கு வரும். பொதுவாகவே, உங்களது விண்ணப்பத்தை அங்கீகரித்த நேரத்தில் இருந்து ஆறு மாதங்களுக்குள் உங்கள் சடங்கை வைப்போம்.

## அவுஸ்திரேலியக் குடியுரிமை உறுதிமொழி

நாம் பிறப்பின் காரணமாகவோ அல்லது விருப்பின் காரணமாகவோ அவுஸ்திரேலியராக இருக்கலாம், ஆனால் அனைத்து அவுஸ்திரேலியக் குடிமக்களும் நமது பொறுப்புக்களையும் சுதந்திரங்களையும் புரிந்து கொள்ளவதும், ஒரு குடிமகனாக இருப்பது என்றால் என்ன பொருள் என்பதையும் புரிந்து கொள்வது அவசியமானதாகும். இது நமது நாட்டின் தொடர் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

அவுஸ்திரேலியக் குடியுரிமைச் சடங்கிற்கு செல்லும் போது நீங்கள் அவுஸ்திரேலியக் குடியுரிமை உறுதிப்பிரமாணம் ஒன்றை மேற்கொள்வீர்கள்.

அப்படிச் செய்வதன் மூலம், உங்களது பற்றுறுதியை அவுஸ்திரேலியாவிற்கு நீங்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தி, குடியுரிமையின் பொறுப்புக்களையும், சுதந்திரங்களையும் ஏற்றுக்கொள்கிறீர்கள்.

இந்த உறுதிப்பிரமாணத்தில் அடங்கியுள்ளவை:

*கடவுள் மீது உறுதியாக, இக்கணத்திலிருந்து இனி வரும் காலமெல்லாம்,**

*அவுஸ்திரேலியாவிற்கும், அதன் மக்களுக்கும்,*

*அவர்களின் ஜனநாயக நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்வதாகவும்,*

*அவர்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் மதித்தொழுகுவதாகவும்,*

*அவர்களின் சட்டங்களை மதித்துப் பின்பற்றுவதாகவம் உறுதிப் பிரமாணம் அளிக்கின்றேன்.*

*கடவுள் மீது உறுதியாக என்ற வார்த்தைகளை உபயோகிப்பதா அல்லது வேண்டாமா என்பதை ஒருவர் தெரிவு செய்து கொள்ளலாம்.

இப்புத்தகத்தினை நீங்கள் மேலும் படிக்கும் வேளையில், உறுதிப்பிரமாணத்தின் முழு அர்த்தத்தினையும் அவுஸ்திரேலிய சமூகத்தில் உங்கள் பங்கினை எவ்வாறு மேம்படுத்தலாம் எனபதையும் நீங்கள் புரிந்து கொள்ளலாம்.



# அவுஸ்திரேலியக் குடியுரிமைச் சடங்கு

அவுஸ்திரேலிய குடியுரிமைச் சடங்குகள், சிறியவையாகவும், வெகு சிலரை மட்டுமே ஈடுபடுத்துவதாகவும் இருக்கலாம், அல்லது அவை மிகப் பெரியவையாகவும், நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மக்களையும் கூட ஈடுபடுத்துவதாகவும் இருக்கலாம். புதிய குடிமக்களிடையேயும், சடங்கினை நிறைவேறறும் அதிகாரிகளிடையேயும் காணப்படும் உணர்ச்சியின் ஆழமும், பெருமிதமும் இந்தச் சடங்கை மிகவும் மகிழ்ச்சியானதோர் கொண்டாட்டமாக்குகிறது.

குடியுரிமைச் சடங்கின் துவக்கத்தில், உங்கள் பகுதியின் பாரம்பரிய உரிமையாளர்களான பூர்வீகக் குடிகள் மற்றும் தோர் ஸ்ட்ரெயிட் தீவுமக்களின் பிரதிநிதியாளர் ஒருவர் உங்களை வரவேற்கலாம். இப்படி நாட்டிற்கு வரவேற்கும் நிகழ்ச்சி நிரலை பூர்வீக அவுஸ்திரேலியர்களே, அவர்களது பாரம்பரிய சொந்த நிலங்களுக்கு பழக்கமாக வைத்துள்ளார்கள். நீங்கள் இருக்கும் சமுதாயத்தின் மற்ற தலைவர்களிடமிருந்து அல்லது அரசாங்கப் பிரதிநிதிகளிடமிருந்து வரவேற்பு உரைகளை அல்லது ஊக்க உரைகளைச் சொல்லக் கேட்பீர்கள்.

அவுஸ்திரேலியக் குடிமக்களாவற்கு விருப்பம் தெரிவித்து, உறுதிப்பிரமாணம் எடுத்துக் கொள்ளும் மற்றவர்களுடன் சேர்ந்து அவுஸ்திரேலியக் குடியுரிமை உறுதிப் பிரமாணத்தை நீங்கள் வாசிப்பீர்கள் அல்லது மற்றவர்கள் வாசிக்கக் கேட்டு அதை உரத்த குரலில் திரும்பச் சொல்லுவீர்கள். இது இச்சடங்கின் மிக முக்கியமான பகுதியாகும். அவுஸ்திரேலியாவின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு உறுதி மொழியை நீங்கள் வழங்கும் வரையில் நீங்கள் ஒரு அவுஸ்திரேலியக் குடிமனாக மாட்டீர்கள்.

வேத நூல் ஒன்றையோ அல்லது வேதவாசகம் ஒன்றையோ நீங்கள் உங்களுடன் எடுத்து வர வரவேற்கிறோம், ஆனால் அப்படிச் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

குடியுரிமையின் அர்த்தம் என்ன என்பது குறித்து உங்களது சமூகத்திலுள்ள முக்கிய பிரமுகர்களும், அரசுப் பிரதிநிதிகளும் சிற்றுரைகள் ஆற்றுவர். உங்களுடைய அவுஸ்திரேலியக் குடியுரிமைச் சான்றினை நீங்கள் பெறுவீர்கள், அத்துடன் சமூகத்தினரிடமிருந்து சிறு அன்பளிப்பு ஒன்றையும் நீங்கள் பெறக்கூடும். எல்லோரும் அட்வான்ஸ் அஸ்ட்ராலியா ஃபெயர் எனும் அவுஸ்திரேலிய தேசிய கீதத்தினை பாடுவார்கள்.

இந்த அவுஸ்திரேலியக் குடியுரிமைச் சடங்கிற்குப் பிறகு, உங்களுக்கு கூட இருக்கும் சக அவுஸ்திரேலியர்களை சந்தித்து அவர்களுடன் இந்த நிகழ்வை மகிழ்வாய்க் கொண்டாடும் வாய்ப்பு கிட்டும்.

நீங்கள் அவுஸ்திரேலியக் குடிமக்களாக ஆனதற்கும், அவுஸ்திரேலியாவில் அமைதியான மற்றும் பயன் மிக்க வாழ்க்கை ஒன்றினைத் துவங்குவதற்கும் எமது நல்வாழ்த்துக்கள்.

## மேலதிகத் தகவல் பெற

எங்களது www.citizenship.gov.au எனும் அவுஸ்திரேலியக் குடியுரிமை இணையதளத்திற்குச் சென்று பாருங்கள்.





# பரீட்சைக்குரிய பகுதியின் துவக்கம்



# பகுதி ஒன்று

## அவுஸ்திரேலியாவும் அதன் மக்களும்

# அவுஸ்திரேலியாவும் அதன் மக்களும்

குடியுரிமைச் சடங்கில், நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கும், அதன் மக்களுக்கும் விசுவாசமாக நடந்து கொள்வதாக உறுதியளிக்கிறீர்கள். ஆகவே, நமது சுதேசப் பாரம்பரியம் உள்ளிட்ட, அவுஸ்திரேலயாவின் சமுதாயம் மற்றும் மக்கட்தொகை குறித்ததோர் புரிந்து கொள்ளுதல் உங்களுக்கு இருப்பது முக்கியமானதாகும். அவுஸ்திரேலியாவின் வரலாற்றையும், எவ்விதமாக நாங்கள் ஒரு நிலையானதும், வெற்றிகரமான பல்கலாச்சார தேசமாக உருவானோம் என்பதையும் புரிந்து கொள்வதும், முக்கியமானதாகும்.

இந்தப் பிரிவில், நாம் நமது வரலாற்றுக்குப் பங்களித்துள்ள ஒருசில நிகழ்வுகளைக் குறித்துப் படித்துப் பார்ப்போம். இதில், நமது மாகாணங்கள் மற்றும் பிரதேசங்கள் குறித்த தகவல்களும், தனித்துவமாக அவுஸ்திரேலியராக இருப்பதாக நாம் பெருமையுடன் அடையாளம் காட்டிக்கொள்ளும் பாரம்பரியங்களையும், அடையாளங்களையும் குறித்த தகவல்களும் இருக்கின்றன.

## பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்கள்

அவுஸ்திரேலியாவின் முதல் குடிகள் என்போர் பூர்வீகக் குடிகளும், தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசிகளுமேயாவர், இவர்களிடம் தான் உலகின் மிகப்பழமையான, தொடர்ச்சியான கலாச்சாரங்களும், பாரம்பரியங்களும் உள்ளன.

வரலாற்று ரீதியாக, பூர்வீகக் குடிகள், அவுஸ்திரேலியப் பெரும்பரப்பில் இருந்தும், தாஸ்மானியாவிலிருந்தும் வந்தவர்களாவர். தொல்பொருள் ஆராய்ச்சிப் பதிவேடுகள், இத்தகைய பூர்வீகக் குடிகள் 65,000 ஆண்டகளுக்கும் 40,000 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு முன்பே அவுஸ்திரேலியாவிற்கு வந்தடைந்ததாகச் சொல்கின்றன; இருந்தாலும், பூர்வீகக் குடிகளோ, இந்த மண் உருவான வரலாற்றிற்கே இவர்கள் தான் முதன்மையானவர்கள் என்பதாகவும், இவர்களது ஆக்க வரலாறு காலம் ஆரம்பிப்பதிலிருந்து துவங்குகிறது என்பதாகவும் நம்புகிறார்கள். தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவுவாசிகள், குயின்ஸ்லாந்தின் வட முனைக்கும், பப்புவா நியூ கினியாவிற்கும் இடைப்பட்ட தீவுகளில் இருந்து வந்தவர்களாவர்.

பூர்வீகக் குடிகளிடத்திலும், தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசிகளிடத்திலும், இன்றைக்கும் அவர்களை வழிநடத்திச் செல்கிற புரதான கால நம்பிக்கைகளும், பாரம்பரியங்களும் இருக்கின்றன. அவர்களுக்கு இந்த மண்ணோடு ஆழமான தொடர்பு இருக்கிறது, அவற்றை அவர்கள் தங்களது வரலாற்றிலும், கலையிலும், நடனத்திலும் வெளிப்படுத்துகிறார்கள். சுதேச கலாச்சாரங்கள், பல்வேறு வகையானவையும், அவுஸ்திரேலிய நாட்டு அடையாளத்தின் முக்கியமானதோர் பங்குமாகவே இருக்கின்றன.

பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவுவாசிகள் குறித்த இன்னும் அதிகத் தகவல்களை *பகுதி 5, இன்றைய அவுஸ்திரேலியா* மற்றும் *பகதி 6, நமது அவுஸ்திரேலிய வரலாறு* ஆகியவற்றில் காணலாம்.

## ஐரோப்பியக் குடியேற்றங்களின் ஆரம்ப காலங்கள்

ஐரோப்பியக் குடியேற்றங்கள், கிரேட் பிரிட்டனில் இருந்து, ஜனவரி 26, 1788 ஆம் தேதியில், 'முதல் கப்பல் படை' என்பதாகத் தெரிய வந்த, முதல் 11 தண்டனைக் கைதிகளைக் கொண்ட கப்பல்களின் வரவோடு ஆரம்பித்தன.

இந்தக் காலத்தில் தான், பிரிட்டிஷ் சட்டங்கள் கடுமையானவையாக இருந்தன, அதனால், குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையிலானவர்களை அங்குள்ள சிறைகளால் கொள்ளமுடியாமல் இருந்தது. இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக, பிரிட்டிஷ் அரசாங்கம், தண்டனைக் கைதிகளை உலகின் மறு பக்கங்களுக்கு; அதாவது நியூ சவுத் வேல்ஸின் புதிய குடியேற்றங்களுக்கு அனுப்பி வைக்க முடிவு செய்தது.

நியூ சவுத் வேல்ஸ் குடியேற்றங்களின் முதல் கவர்னர், கேப்டன் ஆர்தர் ஃபிலிப் என்பவராவார். அந்தக் குடியேற்றம் நீண்ட காலம் நிலைத்து வந்தது, அதோடு அதிகமதிகமாக புதிய தண்டனைக் குற்றவாளிகளும், சுதந்திரமாக வந்து தங்குவோரும் வரவர, அது வளர்ந்து, உருவாகி வந்தது. அவுஸ்திரேலியாவின் மற்ற பகுதிகளிலும் அதிகமதிகமான குடியேற்றங்களைத் தோற்றுவித்தார்கள்.

ஆரம்பகாலத்தில் சுதந்திரமாக வந்து குடியமர்ந்தவர்கள், கிரேட் பிரிட்டனில் இருந்தும் அயர்லாந்திலிருந்து வந்தவர்களாவர். இந்த பிரிட்டிஸ் மற்றும் அயர்லாந்து பாரம்பரியம், அவுஸ்திரேலியாவின் சமீபத்திய வரலாற்றிலும், கலாச்சாரத்திலும், அரசியலிலும் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

1851 ஆம் ஆண்டில், நியூ சவுத் வேல்ஸ் மற்றும் விக்டோரியா குடியேற்றங்களில் தங்கம் இருப்பதைக் கண்டுபிடித்த போது, 'தங்க வேட்டை' ஆரம்பமானது. உலகெங்கிலும் இருந்து வந்த மக்கள், தங்களுக்கு இருக்கும் அதிர்ஷ்டத்தைப் பார்ப்பதற்காக, இக்குடியேற்றங்களுக்கு வந்து சேர்ந்தார்கள். இந்தக் காலத்தில் வந்து சேர்ந்த சீனர்கள் தான் ஐரோப்பாவில் இருந்து வராத முதலில் குடியேறிய பெரும் குழுக்களாவர். 10 ஆண்டுகளில், அவுஸ்திரேலிய மக்கட்தொகை இருமடங்கிற்கும் அதிகமானது.



# அவுஸ்திரேலிய தேசம்

1901 ஆம் ஆண்டில், தனித்தனியாக இருந்த குடியேற்றங்களை ஒன்றிணைத்து, காமன்வெல்த் ஆஃப் அவுஸ்திரேலியா என்று சொல்லும், மாகாணங்களின் கூட்டமைப்பாக்கினார்கள். இந்தச் சமயத்தில் தான் நமது தேசிய ஜனநாயக அமைப்புகள், நமது தேசிய பாராளுமன்றம், அரசாங்கம் மற்றும் உயர்நீதி மன்றம் உட்பட, புதிய அவுஸ்திரேலிய அரசியலமைப்பின் கீழ் நிர்மாணிக்கப் பெற்றது. 1901 ஆம் ஆண்டில், அவுஸ்திரேலியாவின் மக்கட்தொகை சுமார் நாற்பது இலட்சமாக இருந்தது. இந்த எண்ணிக்கையில், பூர்வீகக் குடிகளையும், தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவுவாசிகளையும் சேர்க்கவில்லை, ஏனென்றால் 1967 ஆம் ஆண்டில் எடுத்ததோர் தீர்மானத்திற்குப் பிறகு தான் அவர்களை அவுஸ்திரேலிய மக்கட்தொகையின் அதிகாரப்பூர்வக் கணக்குகளில் சேர்த்தார்கள்.

20 ஆம் நூற்றாண்டின் முதல் பாதி முழுவதிலும், குடியேற்ற அளவுகள் அதிகரித்தும், குறைந்தும் வந்தன. பிரிட்டிஷ் குடிவரவாளர்களை இங்கு வந்து குடியமரச் செய்ய ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் இருந்தன, அதன்படி பலர் குடிமர்ந்தனர்.

2 ஆம் உலகப்போருக்குப் பிறகு, பல இலட்சக்கணக்கானவர்கள் ஐரோப்பாவில் தங்களது சொந்த நாடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை வந்த போது, அலையலையாக பிரிட்டிஷ் அல்லாத குடிவரவாளர்கள் வந்து சேர்ந்தனர். பெரும் எண்ணிக்கையிலான ஐரோப்பியர்கள், புதியதோர் வாழ்வை அமைத்துக் கொள்வதற்காக அவுஸ்திரேலியாவிற்கு வந்து சேர்ந்தனர்.

சமீபத்திய ஆண்டுகளில், நமது குடிவரவு மற்றும் அகதி திட்டங்கள், உலகெங்கிலும் இருந்து அவுஸ்திரேலியாவிற்கு மக்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. குடும்பத்தோடு இணைவதற்கும், புதிய வாழ்வைத் துவங்குவதற்கும், வறுமை, போர் அல்லது கொடுமையில் இருந்து தப்புவதற்கும் இங்கு வந்திருக்கிறார்கள்.

அவுஸ்திரேலிய மக்கட்தொகையின் வேற்றுமை, கடந்த இருபதாண்டுகளில் அதிகரித்திருக்கிறது. இந்த வேற்றுமையான, வளமான சமுதாயமே, உலகோடு அவுஸ்திரேலியாவின் இணைப்பை விரிவாக்குகிறது. அவுஸ்திரேலியமக்களின் வேற்றுமையை நாம் கொண்டாடும் அதே வேளையில், நாம் ஒன்றிணைந்ததும், பின்னிப் பிணைந்ததுமானதோர் தேசத்தை அமைத்திடவே குறிக்கோள் கொண்டுள்ளோம்.

அவுஸ்திரேலியாவின் தேசிய மொழி ஆங்கிலமாகும். இது நமது தேசிய அடையாளத்தின் அங்கமாகும். அவுஸ்திரேலிய மதிப்புகளுக்கு இணங்க, அவுஸ்திரேலிய சமுதாயத்தில் அவர்கள் பங்குபெற உதவுதற்கு, குடிவரவாளர்கள் ஆங்கில மொழியைக் கற்றுப் பயன்படுத்த வேண்டும். ஆங்கிலத்தில் தகவல் தொடர்பு கொள்வது, ஆஸ்திரேலியாவில் பிழைப்பை நடத்துவதற்கும், உழைப்பதற்கும் முக்கியமானதாகும்.

100 க்கும் மேற்பட்ட தனித்துவமான பூர்வீகக் குடிகள் மற்றும் தோரஸ் ஸ்டிரெய் தீவு வாசிகள் மொழிகள் உள்ளிட்ட, மற்ற மொழிகளுக்கும் மதிப்பளிக்கிறோம்.

# அவுஸ்திரேலியாவின் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்கள்


தி காமன்வெல்த் ஆஃப் அவுஸ்திரேலியா என்பது மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களைக் கொண்டதோர் கூட்டமைப்பாகும். இங்கு ஆறு மாகாணங்களும், இரண்டு பெருநிலப்பகுதி பிரதேசங்களும் இருக்கின்றன. கேன்பெரா தான் அவுஸ்திரேலியாவின் தலைநகரமாகும், அதோடு ஒவ்வொரு மாகாணத்திற்கும் பெருநிலப் பிரதேசங்களுக்கும் அதனதன் தலைநகரங்கள் இருக்கின்றன.





| மாகாணம் | தலைநகரம் |
|---|---|
| நியூ சவுத் வேல்ஸ் (NSW) | சிட்னி |
| விக்டோரியா (Vic.) | மெல்போர்ன் |
| குயின்ஸ்லாந்து (Qld) | பிரிஸ்பேன் |
| வெஸ்டர்ன் அவுஸ்திரேலியா (WA) | பெர்த் |
| சவுத் அவுஸ்திரேலியா (SA) | அடிலெய்டு |
| தாஸ்மானியா (Tas.) | ஹோபர்ட் |
| **பிராந்தியம்** | **தலைநகரம்** |
| அவுஸ்திரேலய தலைநகரப் பிராந்தியம் (ACT) | கேன்பெர்ரா |
| வடக்குப் பிராந்தியம் (NT) | டார்வின் |

# மாகாணங்கள்


**நியூ சவுத் வேல்ஸ்** தான் பிரிட்டிஷார் தோற்றுவித்த முதல் குடியேற்றமாகும். சிட்னி தான் நியூ சவுத் வேல்ஸின் தலைநகரமும், நாட்டின் மிகப்பெரிய நகரமுமாகும். சிட்னி ஹார்பர் பிரிட்ஜ் மற்றும் ஓபெரா ஹவுஸ் ஆகியவை தேசியச் சின்னங்களாகும்.




**பெருநில மாகாணங்களிலேயே விக்டோரியா** தான் மிகச் சிறியதாகும். விக்டோரியாவின் தலைநகரம் மெல்போர்ன் ஆகும். விக்டோரியாவில் இருக்கிற அநேக அருமையான கட்டிடங்கள், 1850 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த தங்க வேட்டையால் உருவான சொத்துக்களினால் கட்டப்பட்டவையாகும். விக்டோரியாவின் சின்னங்களில், மெல்போர்ன் கிரிக்கெட் கிரவுண்ட், தி 12 அப்போஸ்டில்ஸ், மற்றும் தி ராயல் எக்ஸிபிஷன் பில்டிங் ஆகியவை அடங்குகின்றன.



**குயின்ஸ்லாந்து தான்** இரண்டாவது மிகப்பெரிய மாகாணமாகும். குயின்ஸ்லாந்தின் தலைநகரம் பிரிஸ்பேன் ஆகும். தோர்ஸ் ஸ்டிரெய்ட் தீவுகள், மாகாணத்தின் வடக்கே அமைந்துள்ளன, அதோடு உலகப் பிரசித்தி பெற்ற கிரேட் பேரியர் ரீஃப் இதன் கிழக்குக் கடற்கரை நெடுகிலும் அமைந்துள்ளது. குயின்ஸ்லாந்தில் வெப்பமண்டல மழைக்காடுகளும், மிதவெப்பமான கடற்கரைப் பகுதிகளும், பெரும்பாலும் வறண்ட உள்நிலப்பகுதியும் இருக்கிறது.




**மேற்கு அவுஸ்திரேலியா தான்** மிகப்பெரிய மாகாணம். பெர்த் தான் மேற்கு அவுஸ்திரேலியாவின் தலைநகரமாகும். இம்மாகாணத்தின் கிழக்குப் பகுதி பெரும்பாலும் பாலைவனமாகும், அதே வேளையில் தென்-மேற்குப் பகுதி வளமான விவசாய மற்றும் திராட்சை விளையும் பகுதியாகும். இம்மாகாணம், பெரிய அளவிலான சுரங்கத் திட்டங்களுக்கு அமைவிடமாகும். மேற்கு அவுஸ்திரேலியாவின் சின்னங்களில், நிங்காலூ கடற்கரை, மார்கரெட் ஆறு, மற்றும் கிம்பர்லி பிராந்தியம் ஆகியவை அடங்குகின்றன.



**தெற்கு அவுஸ்திரேலியாவில்** கரடுமுரடான கடற்கரைப் பகுதியும், அநேக பிரசித்திபெற்ற திராட்சைப் பிராந்தியங்களும் இருக்கின்றன. தலைநகரமான அடிலெய்டில், நுட்பமான காலனி கால கட்டிடக்கலைக்கான அநேக உதாரணங்கள் அமைந்துள்ளன. தெற்கு அவுஸ்திரேலியாவின் சின்னங்களில், பரோஸா பள்ளத்தாக்கு மற்றும் ஃப்ளிண்டர்ஸ் மலைத்தொடர்கள் அடங்குகின்றன.




**தாஸ்மானியா** தான், மிகச்சிறிய மாகாணமாகும், இது பெருநிலப்பகுதியில் இருந்து பாஸ் நீர்ச்சந்தியினால் பிரிக்கப்பட்டதாகும். தாஸ்மானியாவின் தலைநகரம் ஹோபார்ட் ஆகும். இத்தீவின் பெரும்பாலான பகுதி பாழ்படாத வனாந்திர நிலமாகும். தாஸ்மானியச் சின்னங்களில், கிரேடில் மவுண்டெய்ன், போர்ட் ஆர்தர், மற்றும் பே ஆஃப் பயர்ஸ் ஆகியவை அடங்குகின்றன.




# பிரதேசங்கள்

**அவுஸ்திரேலிய தலைநகரப் பிரதேசம்** சிட்னிக்கும், மெல்போர்னுக்கும் இடையே அமைந்துள்ளது. இதில் தான் தேசத்தின் தலைநகரான கேன்பெர்ரா அமைந்துள்ளது. பற்பல தேசிய நிறுவனங்கள் கேன்பெர்ராவில் அமைந்துள்ளன, இதில் பார்லிமெண்ட் ஹவுஸ் மற்றும் அவுஸ்திரேலிய ஹை கோர்ட் ஆகியவை அடங்குகின்றன.



**வடக்குப் பிரதேசத்தில்** மாகாணத்தின் வடக்கில் வெப்பமண்டலச் சூழல் நிலவுகிறது அதோடு தெற்கில் வறண்ட சிவந்த பாலைவனம் அமைந்துள்ளது. டார்வின் தான் தலைநகரமாகும். வடக்குப் பிரதேசத்தின் சின்னங்களில், உளுரு, கட்டா ஜூட்டா மற்றும் கிங்ஸ் கேன்யான் ஆகியவை அடங்குகின்றன.





# பாரம்பரியங்கள்

## நாட்டிற்கு வரவேற்றல் மற்றும் நாட்டின் ஏற்பு நிகழ்ச்சி நிரல்கள்

நாட்டிற்கு வரவேற்றல் என்பது, இப்பகுதியின் பாதுகாவலர்களான பூர்வீகக் குடிகள் அல்லது தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசிகள், தங்களது பாரம்பரிய மண்ணிற்கு புதிதாக வருபவர்களை வரவேற்று நடத்தும் ஒரு கலாச்சாரச் சடங்காகும். இது, புதிதாக வருபவர்கள் இம்மண்ணில் பாதுகாப்பானதும், பாதுகாக்கப்பெற்றதுமானதோர் பயணத்தை மேற்கொள்வதை உறுதி செய்யும் வகையில், பாரம்பரியமாக நடத்தப்பெறுவதாகும்.

நாட்டிற்கு வருவதை வரவேற்கும் சடங்கு, பாடல்கள், நடனங்கள், புகையெழுப்பும் கொண்டாட்டங்கள் அல்லது பாரம்பரிய மொழி அல்லது ஆங்கிலத்தில் உரைவீச்சுக்கள் உட்பட, பல விதங்களில் இடம்பெறலாம்.

நாட்டிற்கு வரவேற்கும் சடங்கு தான், நிகழ்ச்சியைத் துவங்குவதற்கான நிகழ்வுகளில் முதல் நிகழ்வாக இருக்கும்.

நாட்டின் ஏற்பு என்பது, இந்தக் கூட்டம் பூர்வீகக் குடிகள் அல்லது தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவுவாசிகளின் நிலத்தில் நடைபெறுகிறது என்பதைப் புரிந்துணர்ந்து கொள்வதற்கும்; பாரம்பரியப் பாதுகாவலர்களுக்கு, குறிப்பாக கடந்த கால மற்றும் தற்கால முதியோர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கும்; கூடியுள்ள பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசிகளுக்கு மரியாதை செலுத்துவதற்குமானதோர் சந்தர்ப்பமாகும்.

நாட்டின் ஏற்பு என்பதை வழக்கமாக கூட்டங்களிலும், நிகழ்ச்சிகளிலும் வரவேற்பு மற்றும் ஒழுங்குபடுத்தலின் ஒரு பகுதியாகவே நடத்துகிறார்கள். நாட்டின் ஏற்பு நிகழ்ச்சியை எவர் வேண்டுமானாலும் நடத்தலாம். கூட்டங்களில்/நிகழ்ச்சிகளில், இதைப் பொதுவாக அக்கொண்டாட்டங்களின் தலைவர் அல்லது முதல்வரே செய்கிறார்.

இச்சடங்குகளை பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசக்ளுக்குக் மரியாதை செய்யும் முகமாகவே நடத்துகிறார்கள்.



# அவுஸ்திரேலியரது முக்கிய தினங்கள்

## அவுஸ்திரேலிய தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ஆம் திகதியில் நாம் அவுஸ்திரேலிய தினத்தைக் கொண்டாடுகிறோம். அவுஸ்திரேலிய தினம், அவுஸ்திரேலியாவில் இருக்கிற ஒவ்வொரு மாகாணத்திலும், பிரதேசத்திலும் ஒரு பொது விடுமுறை நாளாகும். இது, 1788 ஆம் ஆண்டில், கிரேட் பிரிட்டனில் இருந்து, முதல் கப்பற்படை வந்து சேர்ந்த நாளாகும்.

அவுஸ்திரேலிய தினத்தன்று, அவுஸ்திரேலியா முழுவதிலும் இருக்கிற சமுதாயங்கள் நமது வரலாற்றையும், நமது பகிர்ந்து கொள்கிற சாதனைகளுக்குப் பங்களித்த மக்களையும் பிரதிபலிக்கிறார்கள். இது தான் அவுஸ்திரேலியாவிலேயே மிகப்பெரிய பொது விடுமுறை நாளாகும்.

அவுஸ்திரேலியா தினம் என்பது, நமது சமகால மற்றும் சுறுசுறுப்பான தேசத்திற்கு ஒவ்வொரு அவுஸ்திரேலியரும்: கிட்டத்தட்ட 65,000 ஆண்டுகளாக இங்கேயே இருந்து வரும் - பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசிகளில் இருந்து – சந்ததி பின் சந்ததியாக இங்கே வாழ்ந்திருக்கிறவர்கள், மற்றும் பூகோளத்தின் அனைத்து மூலைகளில் இருந்து நமது நாட்டிற்கு வந்திருக்கிறவர்கள் வரைக்கும் - ஒவ்வொருவரும் செய்யும் பங்களிப்பை ஏற்று, அதைக் கொண்டாடுவது குறித்ததோர் தினமாகும். அவுஸ்திரேலியா எங்கிலும், பிரத்தியேகக் குடியுரிமை விழாக்கள் உட்பட நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளால் அவுஸ்திரேலிய தினம் கொண்டாடப்படுகிறது.

அவுஸ்திரேலிய தின'த்தன்று, இரவு ஆண்டின் சிறந்த அவுஸ்திரேலியர் விருதுகளை பிரதமர் கென்பராவில் அறிவிப்பார்.

## ஆன்ஸக் தினம

ஆன்ஸக் தினத்தை ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 25-ஆம் தேதி அனுசரிக்கிறோம். முதலாம் உலகப் போரின் போது, 1915-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ஆம் தேதி துருக்கியில் உள்ள கலிபொலி எனும் இடத்தில் அவுஸ்திரேலிய மற்றும் நியூஸீலாந்துப் படையினர் தரையிறங்கிய தினத்தைத் தான் ஆன்ஸக் தினம் எனப்பெயரிட்டுள்ளார்கள்.

யுத்தங்கள் சண்டைகள் மற்றும் அமைதி காக்கும் பணிகளில் சேவையாற்றும் போது உயிர்த் தியாகம் செய்த அனைத்து அவுஸ்திரேலியர்களையும் நாம் அமைதியாக நினைவு கூறும் தனிச்சிறந்த நாளே ஆன்ஸக் தினமாகும். அனைத்து இராணுவ வீரர்கள் மற்றும் வீராங்கனைகளது தைரியத்தையும், நாட்டுப்பற்றையும் நாம் மரியாதை மதிப்புடன் நினைவு கூர்கிறோம்.

அவுஸ்திரேலிய தினம், ஆன்ஸக் தினம் மற்றும் முக்கியமான தேசிய தினங்கள் மற்றும் கொண்டாட்டங்கள் பற்றிய மேலதிகத் தகவல்களை *பகுதி 5* இல் *'ன்றைய அவுஸ்திரேலியா*வில் காணலாம்.

# அவுஸ்திரேலியக் கொடிகள்

அவுஸ்திரேலிய தேசியக் கொடி தான் நமது தேசத்தின் அதிகாரப்பூர்வக் கொடியாகும். அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளதும், சமுதாயங்களில் பறக்க விடக்கூடியவையுமான மற்ற கொடிகளில், அவுஸ்திரேலிய பூர்வீகக் குடிகளின் கொடியும், தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசிகளின் கொடியும் அடங்குகின்றன.

ஒவ்வொரு மாகாணத்திற்கும், பிரதேசத்திற்குமென சொந்தக் கொடிகளும்ம் உள்ளன. அவற்றைப் பக்கம் 11இல் காணலாம்.

## அவுஸ்திரேலிய தேசியக் கொடி

அவுஸ்திரேலிய தேசியக் கொடியில் நீலம், வெள்ளை மற்றும் சிவப்பு வண்ணங்கள் உள்ளன.

- ஐக்கிய இராஜ்ஜியத்தின் கொடியான, 'யூனியன் ஜேக்', மேல் இடது மூலையில் உள்ளது. இது, நமது பிரித்தானிய குடியேற்ற வரலாற்றினையும், அதன் விளைவாக நாம் சுதந்தரித்த சட்டங்களையும், அமைப்புகளையும் இது குறிக்கிறது.
- பொதுநல நட்சத்திரம், யூனியன் ஜேக்- இன் கீழே உள்ளது. இந்த நட்சத்திரத்தில் ஏழு முனைகள் உள்ளன, ஒவ்வொரு முனையும் ஆறு மாகாணங்களில் ஒவ்வொன்றையும், ஒரு முனை பிரதேசங்களையும் குறிக்கின்றது.
- வலது பக்கத்தில் உள்ள, தென் சிலுவை என்பது, தெற்கு வானில் காணப்பெறும் நடத்திரக்கூட்டங்களாகும்.



## அவுஸ்திரேலிய பூர்வீகக் குடிகள் கொடி

அவுஸ்திரேலிய பூர்வீகக் கொடியில், கருப்பு, சிவப்பு மற்றும் மஞ்சள் நிறங்கள் உள்ளன.

- மேல் பாதிப்பகுதி கருப்பாகும், அது அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகளைக் குறிக்கிறது.
- அடிப் பாதிப்பகுதி சிவப்பாகும், அது நிலத்தைக் குறிக்கிறது, இது சம்பிரதாய முக்கியத்துவம் பெற்றதாகும்.
- மஞ்சல் நிற வட்டம் சூரியனைக் குறிக்கிறது.



## தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசிகள் கொடி

தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசிகளின் கொடி, பச்சை, நீலம், கருப்பு மற்றும் வெள்ளை நிறங்களைக் கொண்டதாகும்.

- பச்சை நிறப் பட்டைகள் நிலத்தைக் குறிக்கின்றன.
- மத்தியில் இருக்கிற நீலனிறப் பலகம் கடலைக் குறிக்கிறது.
- கருப்புக் கோடுகள், தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகளைக் குறிக்கிறது.
- மத்தியில் இருக்கிற வெள்ளை நிற நடனக் கலைஞரின் தலையணி, அனைத்து தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகளுக்குமான சின்னமாகும்.
- வெள்ளை நட்சத்திரத்தின் புள்ளிகள், தோர்ஸ் ஸ்டிரெயிட்டில் இருக்கிற தீவுக் கூட்டங்களைக் குறிக்கிறது, அந்த வெள்ளை நிறம் அமைதியைக் குறிப்பாகக் காட்டுகிறது.



# அவுஸ்திரேலியாவின் சின்னங்கள்

## காமன்வெல்த் கோட் ஆஃப் ஆம்ஸ்

காமன்வெல்த் கோட் ஆஃப் ஆம்ஸ் என்பது, அவுஸ்திரேலிய காமன்வெல்த்தின் அதிகாரப்பூர்வ அடையாளச் சின்னமாகும். இது நமது தேசிய ஒற்றுமையைக் குறிக்கிறது. இது, அவுஸ்திரேலிய காமன்வெல்த்தின் அதிகாரத்தையும், சொத்தையும் அடையாளப்படுத்துகிறது.

- மத்தியில் இருக்கிற கேடயம், ஆறு மாகாணங்களையும், கூட்டமைப்பையும் குறிக்கிறது.
- அந்தக் கேடயத்தை ஒரு கங்காருவும், ஒரு ஈமுவும் தாங்கிப் பிடிக்கின்றன. இவை இரண்டுமே அவுஸ்திரேலியாவைச் சார்ந்த விலங்கினங்களாகும்.
- ஒரு தங்க காமன்வெல்த் நட்சத்திரம் அந்தக் கேடயத்தின் மேலே அமர்ந்திருக்கிறது.
- பின்னணியத்தில் அவுஸ்திரேலிய தேசிய மலரான கோல்டன் வேட்டில் இருக்கிறது.





## அவுஸ்திரேலிய தேசிய மலர்

அவுஸ்திரேலியாவின் தேசிய மலர் கோல்டன் வாட்டில் ஆகும். இந்தச் சிறிய மரம், முதன்மையாக தென்-கிழக்கு அவுஸ்திரேலியாவிலேயே வளர்கிறது. இதற்கு, பிரகாசமான பச்சை நிற இலைகளும், வசந்த காலத்தில் அனேக மஞ்சள் நிற மலர்களும் இருக்கின்றன. அவுஸ்திரேலியாவின் ஒவ்வொரு மாகாணத்திற்கும், பிரதேசத்திற்குமென சொந்தமாகத் தனித்தனி மலர்ச் சின்னங்கள் இருக்கின்றன.



## அவுஸ்திரேலியாவின் தேசிய நிறங்கள்

அவுஸ்திரேலியாவின் தேசிய நிறங்கள் பச்சையும், தங்க நிறமுமாகும் – இவை கோல்டன் வாட்டில் மலரின் நிறங்களாகும். நமது தேசிய விளையாட்டுக் குழுக்களின் சீருடைகள் வழக்கமாகவே பச்சையும் தங்க நிறமுமானவையாகும்.





## அவுஸ்திரேலியாவின் தேசிய நவரத்தினக்கல்

கோமேதகம் தான் அவுஸ்திரேலியாவின் தேசிய நவரத்தினக்கல் ஆகும். பூர்வீக்க் குடிகள் வீரதீரக் கதைகளின்படி, வானவில் ஒன்று பூமியைத் தொட்டு, கோமேதகத்தின் நிறங்களை உருவாக்கியதாம்.



# அவுஸ்திரேலியாவின் தேசிய கீதம்

’அட்வான்ஸ் அவுஸ்திரேலியா ஃபேர்’ என்பது தான் அவுஸ்திரேலியாவின் தேசிய கீதமாகும். இதை, அவுஸ்திரேலிய குடியுரிமைக் கொண்டாட்டங்கள் மற்றும் பெரிய அளவிலான விளையாட்டு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளின் போது பாடுகிறார்கள்.

## Advance Australia Fair

*Australians all let us rejoice,*
*For we are young and free;*
*We’ve golden soil and wealth for toil;*
*Our home is girt by sea;*
*Our land abounds in nature’s gifts*
*Of beauty rich and rare;*
*In history’s page, let every stage*
*Advance Australia Fair.*
*In joyful strains then let us sing,*
*Advance Australia Fair.*

*Beneath our radiant Southern Cross*
*We’ll toil with hearts and hands;*
*To make this Commonwealth of ours*
*Renowned of all the lands;*
*For those who’ve come across the seas*
*We’ve boundless plains to share;*
*With courage let us all combine*
*To Advance Australia Fair.*
*In joyful strains then let us sing,*
*Advance Australia Fair.*



# பகுதி இரண்டு

## அவுஸ்திரேலேலிய ஜனநாயக நம்பிக்கைகள், உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள்

# அவுஸ்திரேலிய ஜனநாயக நம்பிக்கைகள், உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள்

குடியுரிமைச் சடங்கில், நீங்கள் அவுஸ்திரேலியாவின் ஜனநாயக நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொண்டு, அதன் உரிமைகளையும், சுதந்திரங்களையும் மதித்து நடப்பீர்கள் என்று உறுதியளிக்கிறீர்கள். நீங்கள் அவுஸ்திரேலியர்கள் பகிர்ந்து கொள்கிற, அவுஸ்திரேலியாவின் ஜனநாயக நம்பிக்கைகளையும், உரிமைகளையும், சுதந்திரங்களையும் புரிந்து கொள்கிறீர்கள் என்பது மிகவும் முக்கியமானதாகும்.

இச்சிற்றேட்டின் இந்தப் பகுதி, இத்தகைய நம்பிக்கைகள், உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பட்டியலிடுகிறது. இன்னும் அதிகத் தகவல்களுக்கு, *பகுதி 4 – அவுஸ்திரேலிய மதிப்புகள்* என்பதைப் பாருங்கள்.

## நமது ஜனநாயக நம்பிக்கைகள்

### பாராளுமன்ற ஜனநாயகம்

அவுஸ்திரேலியாவின் அரசாங்க அமைப்பு பாராளுமன்ற ஜனநாயகமாகும். இந்த அமைப்பின் ஒரு பகுதியாக, அரசாங்க அதிகாரம் அவுஸ்திரேலிய மக்களிடமிருந்தே வருகிறது, ஏனென்றால் அவுஸ்திரேலியக் குடிமக்கள், பாராளுமன்றத்தில் அவர்களது பிரதிநிதியாகச் செயல்படுவதற்காக மக்களுக்கு வாக்களிக்கிறார்கள். பாராளுமன்றத்திலிருக்கிற பிரதிநிதிகள், தேர்தல்கள் வாயிலாக, அவர்கள் எடுக்கிற முடிவுகளுக்கு, மக்களுக்குப் பதிலளித்தாக வேண்டும்.

### சட்டத்தின் ஆட்சி

அனைத்து அவுஸ்திரேலியர்களும் சட்டத்தின் சமமானவர்களே. சட்டத்தின் ஆட்சி என்பதன் பொருள், எவருமே, எந்தக் குழுவுமே, அல்லது மத விதியுமே சட்டத்திற்கு மேலானவர் அல்ல. அவுஸ்திரேலிய சமுதாயத்தில் அதிகாரப் பதவியை வகிப்பவர்கள் உட்பட, ஒவ்வொருவரும், அவுஸ்திரேலிய சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். இதில், அரசாங்க, சமுதாய மற்றும் சமயத் தலைவர்கள், அதே போல வியாபாரிகள் மற்றும் காவல்துறையினர் ஆகியோர் அடங்குவர்.

### அமைதியாக வாழ்தல்

அவுஸ்திரேலியர்கள், நிலையான அரசாங்க அமைப்போடு கூடியதோர் அமைதியான நாட்டில் வாழ்வதில் பெருமிதம் கொள்கிறார்கள். அவுஸ்திரேலியர்கள், மாற்றம் என்பது, விவாதம் வாயிலாகவும், அமைதியாகச் சம்மதிக்கச் செய்வதன் வாயிலாகவும், ஜனநாயக நடைமுறையிலும் நடைபெற வேண்டுமென்று நம்புகிறார்கள். ஒருவரின் மனதை அல்லது சட்டத்தை மாற்றுவதற்கு வன்முறையை ஒரு வழியாகக் கொள்வதை நாங்கள் நிராகரிக்கிறோம்.

### பின்னணியத்தைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் மரியாதையளித்தல்

அவுஸ்திரேலியாவின் ஜனநாயக அமைப்பானது, ஒவ்வொரு தனிநபருக்கும், அவர்களது பின்னணியத்தைப் பொருட்படுத்தாமல், அவுஸ்திரேலிய சட்டத்தின் கீழ் உரிமைகள் மற்றும் சமத்துவம் இருக்கிறது, என்ற கொள்கையின் அடிப்படையிலானதாகும். அனைத்து அவுஸ்திரேலியர்களும், இனம், பூர்வீக நாடு, பாலினம், பாலியல் சார்பு, திருமண நிலை, வயது, ஊனம், பாரம்பரியம், கலாச்சாரம், அரசியல், சொத்து அல்லது மதம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், ஒருவரையொருவர், கண்ணியத்தோடும், மரியாதையோடும் நடத்திக்கொள்ள வேண்டும் என்றே எதிர்பார்க்கிறோம்.



# நமது சுதந்திரங்கள்

## பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம்

கருத்துரிமை என்பது ஒரு மைய அவுஸ்திரேலிய மதிப்பாகும், இதுவே நமது ஜனநாயக அமைப்பின் அடித்தளமாகிறது. பேச்சு சுதந்திரம் என்பதன் பொருள், மக்கள் தாங்கள் நினைப்பதை சொல்லவும் எழுதவும் முடியும், அதோடு அவர்களது யோசனைகளை மற்றாவர்களோடு விவாதிக்கவும் முடியும் என்பதேயாகும். உதாரணமாக, மக்கள், அவுஸ்திரேலிய சட்டங்களுக்கு இன்னமும் கீழ்ப்படிந்து நடக்கிற வரையில், எல்லா நேரங்களிலும், அரசாங்கத்தை விமர்சிக்கலாம், அரசாங்க முடிவுகளுக்கு எதிராக அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கலாம், அதோடு சட்டத்தை மாற்றுவதற்காகப் பிரச்சாரம் செய்யலாம்.

கருத்துச் சுதந்திரம் என்பதன் பொருள், மக்கள் தங்களது கருத்துக்களை, கலை, சினிமா, இசை மற்றும் இலக்கியம் உட்பட்டவற்றின் வாயிலாக வெளிப்படுத்தலாம் என்பதேயாகும். மக்கள், சமுதாய அல்லது அரசியல் விவாதங்களுக்காகப் பொது அல்லது தனியார் இடங்களில் கூடுவதற்குச் சுதந்திரமுள்ளவர்களாவர்.

எல்லா நேரங்களிலும், பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரங்களில் ஈடுபட்டிருக்கும் வேளையிலும் கூட, அவுஸ்திரேலிய சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். நாம், மற்றவர்களின் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரங்கலையும் மதித்தாக வேண்டும்.

## சங்க சுதந்திரம்

சங்க உரிமை என்பது, பொதுவான குறிக்கோள்களை அடைவதற்காக சங்கங்களை அமைப்பது அல்லது சங்கங்களில் சேர்வதற்கான உரிமையாகும். உதாரணமாக, அவுஸ்திரேலியாவில் மக்கள், அரசியல் கட்சி, தொழிலாளர் சங்கம், மத, கலாச்சார அல்லது சமுதாயக் குழுக்கள் போன்ற, எந்த சட்டப்பூர்வமான ஸ்தாபனத்திலும் சேர்ந்து கொள்வதற்கு சுதந்திரமானவர்களாவர். மக்கள் சேர வேண்டாம் எனவும் முடிவெடுக்கலாம், அதோடு அப்ப்டிச் செய்யக் கட்டாயப்படுத்த முடியாது.

அவுஸ்திரேலியர்கள், அரசாங்க நடவடிக்கை அல்லது ஒரு ஸ்தாபனத்திற்கு எதிராக போராட்டம் நடத்துவதற்காக மற்றாவர்களுடன் சேர்ந்து கூடலாம். இருந்தாலும், எல்லா நேரங்களிலும், அவுஸ்திரேலிய சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். இதன் பொருள், அது போன்ற கூட்டங்கள் அமைதியானவையாக இருந்தாக வேண்டும், அதோடு அவை எவரையும் காயப்படுத்தக்கூடாது அல்லது சொத்தைச் சேதப்படுத்தக்கூடாது.

## மதச் சுதந்திரம்

அவுஸ்திரேலியாவில் ஜடேவோ-கிறிஸ்தவப் பாரம்பரியம் இருக்கிறது, அதோடு அனேக அவுஸ்திரேலியர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்றே சொல்லிக்கொள்கிறார்கள், ஆனாலும், அவுஸ்திரேலியாவில் எல்லா பெரிய மதங்களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். கிறிஸ்தவப் பண்டிகைகளான புனித வெள்ளி, ஈஸ்டர் ஞாயிறு மற்றும் கிறிஸ்துமஸ் தினங்கள் அவுஸ்திரேலியாவில் பொது விடுமுறை நாட்களாகும்.

அரசாங்கமும், சட்டமும், மக்களின் மதம் அல்லது நம்பிக்கைகள் எதுவாக இருந்தாலும், அனைத்துக் குடிமக்களையும் சமமாகவே நடத்துகிறது. அவுஸ்திரேலியாவில் இருக்கிற அரசாங்கம் மதசார்பற்றதாகும், இதன் பொருள் இது தேவாலயங்கள் அல்லது மற்ற மத அமைப்புகளிலிருந்து தனிப்பட்ட்தாக இயங்குகிறது என்பதாகும். அவுஸ்திரேலியாவிற்கென்று எவ்வித அதிகாரப்பூர்வ தேசிய மதமும் கிடையாது. அவுஸ்திரேலியாவில் இருக்கிறவர்கள், அவர்களுக்குப் பிடிக்கிற எந்த மதத்தையும் பின்பற்றிக்கொள்ளச் சுதந்திரமானவர்கள். அவர்கள் எந்த மதத்தையும் பின்பற்றாமலும் இருந்து கொள்ளலாம்.

எல்லா நேரங்களிலும், மதச் சடங்குகளில் ஈடுபட்டிருக்கும் வேளையிலும் கூட, அவுஸ்திரேலிய சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். அவுஸ்திரேலிய சட்டத்திற்கும், மதப் பழக்கத்திற்கும் இடையே ஒரு முரண்பாடு எழும் போது, அவுஸ்திரேலிய சட்டமே மேலோங்கியதாக இருக்கும்.

# நமது சமத்துவங்கள்

ஒருவரது பாலினம், இனம், ஊனம் அல்லது வயதின் காரணமாக, அவரை மற்றவரைக் காட்டிலும் வித்தியாசமாக நடத்தவில்லை என்பதை உறுதி செய்கிற அனேக சட்டங்கள் அவுஸ்திரேலியாவில் இருக்கின்றன.

## பாலின சமத்துவம்

ஆண்களுக்கும், பெண்களுக்கும் அவுஸ்திரேலியாவில் சம உரிமைகள் உள்ளன. ஒருவரிடம், அவரது பாலினத்தின் காரணமாக பாகுபாடு காட்டுவது சட்டத்திற்கு விரோதமானதாகும்.

## சந்தர்ப்ப சமத்துவம் மற்றும் நியாயமாக நடத்துதல்

அவுஸ்திரேலியர்கள் நமது சமுதாயத்தில் சம அளவு சந்தர்ப்பம் கொடுப்பதை மதிக்கிறார்கள்; இதைத் தான் பெரும்பாலும் நியாயமாக நடத்துதல் என்கிறார்கள். இதன் பொருள், வாழ்க்கையில் ஒருவர் சாதிக்கிறார் என்றால், அது அவரது திறமைகள், உழைப்பு மற்றும் முயற்சியின் பலனால் வர வேண்டுமேயொழிய, அவரது சொத்து அல்லது பின்னணியத்தின் காரணமாக வரக்கூடாது என்பதேயாகும். இது, அவுஸ்திரேலிய சமுதாயத்தில் முறைப்படியான வகுப்புப் பிரிவினைகள் இல்லை என்பதை உறுதி செய்வதற்கானதேயாகும்.

# அவுஸ்திரேலியக் குடியுரிமையின் பொறுப்புக்களும், சுதந்திரங்களும்

நீங்கள் ஒரு அவுஸ்திரேலியக் குடிமகனாக ஆகிவிடும் போது, உங்களுக்குக் கூடுதல் பொறுப்புகளும், சுதந்திரங்களும் இருக்கும்.

## பொறுப்புகள்-அவுஸ்திரேலியாவிற்கு நீங்கள் என்ன கொடுப்பீர்கள்

ஒரு அவுஸ்திரேலியக் குடிமகனாக நீங்கள் செய்தாக வேண்டியவை:

- அவுஸ்திரேலியச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல்
- மத்திய மற்றும் மாகாண அல்லது பிரதேசத் தேர்தல்களிலும், தீர்மானத்திலும் வாக்களித்தல்
- தேவை எழும் நிலையில் அவுஸ்திரேலியாவிற்குத் துணை நிற்றல்
- அழைக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தில் சேவைபுரிதல்

## சுதந்திரங்கள்-அவுஸ்திரேலியா உங்களுக்கு என்ன கொடுக்கும்

ஒரு அவுஸ்திரேலியக் குடிமகனாக நீங்கள் செய்துகொள்ளக் கூடியவை:

- மத்திய மற்றும் மாகாண அல்லது பிரதேசத் தேர்தல்களிலும், தீர்மானத்திலும் வாக்களித்தல்
- வெளிநாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கு, வாரிசாக அவுஸ்திரேலிய குடிமகன்களாக விண்ணப்பித்தல்
- அவுஸ்திரேலிய அரசுப் பணியில் அல்லது அவுஸ்திரேலிய பாதுகாப்புப் படையில் வேலையொன்றுக்கு விண்ணப்பித்தல்
- பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பெற நாடுதல்
- ஒரு அவுஸ்திரேலிய கடவுச்சீட்டிற்கு விண்ணபித்து, மறுபடியும் அவுஸ்திரேலியாவிற்குள் சுதந்திரமாக நுழைதல்
- வெளிநாட்டில் இருக்கையில், ஒரு அவுஸ்திரேலிய அதிகாரியினிடத்தில் தூதரக உதவியைக் கேட்டல்.




## பொறுப்புகள்:

### அவுஸ்திரேலியச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிக

அரசாங்கத்தில் இருக்கிற நமது பிரதிநிதிகள், ஒழுங்கான, சுதந்திரமான மற்றும் பாதுகாப்பான சமுதாயத்தைப் பராமரிப்பதற்காகவும், நமது உரிமைகளைப் பேணிக்காப்பதற்காகவும், சட்டங்களை உருவாக்குகிறார்கள். அவுஸ்திரேலியக் குடிமக்கள் அனைவரும், அவுஸ்திரேலியாவில் இருக்கிற மற்றவர்களும், அவுஸ்திரேலிய சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் இருக்கிற சில முக்கியமான சட்டங்கள் குறித்த இன்னும் அதிகத் தகவல்களை *பகுதி 3, அவுஸ்திரேலியாவில் இருக்கிற சரசாங்கமும், சட்டமும்*என்ற பகுதியில் காணலாம்.

### மத்திய மற்றும் மாகாண அல்லது பிரதேசத் தேர்தல்களிலும், ஒரு தீர்மானத்திலும் வாக்களித்தல்

18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து அவுஸ்திரேலியக் குடிமக்களுக்கும், வாக்களித்தல் என்பது ஒரு முக்கியமான பொறுப்பும், உரிமையும், சுதந்திரமுமாகும்.

18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து அவுஸ்திரேலியக் குடிமக்களுக்கு, மத்திய மற்றும் மாகாண அல்லது பிரதேசத் தேர்தல்களிலும், அவுஸ்திரேலிய அரசியலமைப்பை மாற்றுவதற்கான வாக்களிப்பான, ஒரு தீர்மானத்திலும் வாக்களித்தல் என்பது ஒரு பொறுப்பாகும். இப்படிச் செய்வதன் வாயிலாக, அவுஸ்திரேலியாவை எவ்விதம் அரசாளுகிறார்கள், அதன் எதிர்காலத்திற்கு எவ்விதம் பங்களிக்கிறார்கள் என்பதில் அவுஸ்திரேலியக் குடிமக்களுக்கு ஒரு குரல் இருக்கும்.

மத்திய மற்றும் மாகாண அல்லது பிரதேசத் தேர்தல்களில் வாக்களிப்பது என்பது கட்டாயமானதாகும். சில மாகாணங்களில், உள்ளாட்சி அரசாங்கத் தேர்தல்களில் வாக்களிப்பது கட்டாயமாந்தாக இல்லாமல் இருக்கலாம்.

அவுஸ்திரேலியாவின் அரசியலமைப்பு குறித்த இன்னும் அதிகத் தகவல்களை *பகுதி 3, அவுஸ்திரேலியாவில் இருக்கிற அரசாங்கம் மற்றும் சட்டம்* என்ற பகுதியில் காணலாம்.

### தேவை எழும் நிலையில் அவுஸ்திரேலியாவிற்குத் துணை நிற்றல்

அவுஸ்திரேலிய பாதுகாப்புப் படையில் தன்னார்வத்தோடு சேவையாற்றும் வேளையில், தேவை எழும் நேரத்தில் அவுஸ்திரேலியாவைத் தற்காப்பது ஒரு அவுஸ்திரேலிய குடிமகனின் கடமையாகும். அவசியமானால், அவுஸ்திரேலிய குடிமக்கள் அனைவரும், ஒன்றாகச் சேர்ந்து தேசத்தையும், அதன் வாழ்க்கை முறையையும் தர்க்காப்பதற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

### அழைக்கும் பட்சத்தில் நடுவர் மன்றத்தில் சேவைபுரிதல்

கேட்கிற பட்சத்தில், நடுவர் மன்ற சேவை புரிவது, 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட அவுஸ்திரேலியக் குடிமக்களின் பொறுப்பாகும். ஒரு நடுவர் மன்றம் என்பது, சாதாரண அவுஸ்திரேலிய ஆண்கள் மற்றும் பெண்களைக் கொண்டதோர் குழுவாகும், இவர்கள் நீதிமன்ற வழக்கொன்றில் சாட்சியத்தை கேட்டு, ஒருவர் குற்றவாளியா இல்லையா என்பதை முடிவு செய்கிறார்கள்.

தேர்தல் பட்டியலில் இருக்கிற அவுஸ்திரேலிய குடிமக்களை நடுவர் மன்றமொன்றில் பணிபுரியுமாறு கேட்கலாம். நடுவர் மன்ற சேவை, நீதிமன்ற அமைப்பு வெளிப்படையானதும், நியாயமானதுமாக இருக்கிறது என்பதை உறுதி செய்வதற்கானதேயாகும்.

## சுதந்திரங்கள்

### அவுஸ்திரேலிய அரசுப் பணியிலும், அவுஸ்திரேலிய பாதுகாப்புப் படையிலும் பணிபுரிய விண்ணப்பித்தல்

அவுஸ்திரேலிய குடியுரிமையின் ஒரு சுதந்திரமானது, அவுஸ்திரேலிய அரசுப் பணியில் ஒரு வேலைக்காக விண்ணபித்து, அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்காகப் பணியாற்றுவதேயாகும், உதாரணமாக, சர்வீசஸ் அவுஸ்திரேலியாவில் அல்லது அவுஸ்திரேலிய வரி (ATO) அலுவலகத்தில் பணிபுரிவதாகும்.

அவுஸ்திரேலிய குடிமக்களுக்கு, அவுஸ்திரேலிய பாதுகாப்புப் படையில் (இராணுவம், கப்பற்படை, மற்றும் விமானப்படை) வேலையொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கான உரிமையும் உள்ளது.

### பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட நாடுதல்

18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய அவுஸ்திரேலிய குடிமக்களும், இரட்டைக் குடியுரிமை இல்லாதவர்களுமானவர்கள், மத்திய, மாகாண அல்லது பிரதேச அளவில் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட நாடலாம். அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் சேவைபுரிவது என்பது மரியாதைக்குரியதும், கடும் பொறுப்புள்ளதுமாகும்.

### ஒரு அவுஸ்திரேலிய கடவுச்சீட்டிற்கு விண்ணபித்து, மறுபடியும் அவுஸ்திரேலியாவிற்குள் சுதந்திரமாக நுழைதல்

நீங்கள் ஒரு அவுஸ்திரேலியக் குடிமகனாக ஆகிவிடும் போது, நீங்கள் அவுஸ்திரேலியாவில் சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கான உரிமையுள்ளது. அவுஸ்திரேலிய கடவுச்சீட்டு ஒன்றுக்கு விண்ணபிப்பதற்கான சுதந்திரமும் உங்களுக்குள்ளது. நீங்கள், ஒரு அவுஸ்திரேலியக் குடிமகனாக வெளிநாட்டிற்குப் பயணிக்கும் போது, வீசா தேவையில்லாமலேயே அவுஸ்திரேலியா திரும்புவதற்கான சுதந்திரம் உங்களுக்குள்ளது.

### வெளிநாட்டில் இருக்கும் போது, ஒரு அவுஸ்திரேலிய அதிகாரியிடம் தூதரக உதவியைக் கேட்பது

அனேக நாடுகலில், அவுஸ்திரேலியாவிற்கு தூதரகம், துணைத்தூதரகம், தூதரக அலுவலகம் இருக்கிறது. நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் வேளையில், தேவை ஏற்படும் காலத்தில், ஒரு அவுஸ்திரேலிய அரசாங்க அதிகாரியிடமிருந்து, உங்களால் உதவி கேடுப் பெற முடியும். இதில், உள்நாட்டுக் குழப்பம் மற்றும் இயற்கைப் பேரிடர்கள் போன்ற அவசரகால நிலைமைகள் அடங்குகிறது.

அவுஸ்திரேலிய அலுவலர்களால், வெளிநாட்டில் இருக்கும் அவுஸ்திரேலிய குடிமக்களுக்கு அவசர கால கடவுச்சீட்டு கொடுப்பதிலும், விபத்து, கடும் சுகவீனம் அல்லது மரணம் எனும் நிலையில் ஆலோசனையும், ஆதரவு தருவதிலும் உதவ முடியும்.

இன்னொரு நாட்டில் இருக்கும் போது, நீங்கள் அந்த நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும்.

### வெளிநாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கு, வாரிசாக அவுஸ்திரேலிய குடிமகன்களாக விண்ணப்பித்தல்

அவுஸ்திரேலிய குடிமக்கள், வெளிநாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கு, வாரிசாக அவுஸ்திரேலிய குடிமகன்களாக விண்ணப்பிக்கலாம்.

# அவுஸ்திரேலிய சமுதாயத்தில் பங்கேற்றல்

அனைத்துக் குடிமக்களும், சமுதாயத்தில் தீவிரமாகப் பங்கேற்குமாறு அவுஸ்திரேலியா ஊக்குவிக்கிறது. சுறுசுறுப்பான குடிமக்கள், அவுஸ்திரேலியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பொறுப்பும் சுதந்திரமும் எடுத்துக்கொள்கிறார்கள். உதாரணமாக, நீங்கள் உங்களுக்குப் பக்கத்தில் உள்ள அல்லது உங்கள் பகுதியில் உள்ள சமுதாய ஸ்தாபனங்களில் சேர்ந்து கொள்ளலாம், சமுதாய அல்லது சமூகப் பணிகளைத் தன்னார்வத்தோடு செய்யலாம், ஒரு கலைகள் அல்லது கலாச்சார ஸ்தாபனத்தில் சேரலாம், அதோடு, அரசியல் வாழ்வில் தீவிரமாகப் பங்கேற்கலாம்.

வரி செலுத்துவதும், அவுஸ்திரேலிய சமுதாயத்திற்கு நேரடியாகப் பங்களிக்கும் ஒரு விதமாகும், அதோடு இது சட்டப்படி அவசியமாகிறது. வரியை நீங்கள் சம்பாதிக்கிற பணத்தில் இருந்தே செலுத்துகிறீர்கள், அது ஒரு வேலையிலிருந்தோ, ஒரு வியாபாரம் அல்லது முதலீட்டிலிருந்தோ செலுத்துகிறீர்கள், அதோடு அதை (ATO) அலுவலகமே வசூலிக்கிறது. அனேக சரக்குகள் மற்றும் சேவைகளிலும் வரிகள் இருக்கின்றன. அந்த ATO, அனைத்துக் குடிமக்களும் சரியான அளவு வரியைச் செலுத்துவதற்கான அவர்களது உரிமைகளையும், கடமைகளையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொள்கிறது.

அவுஸ்திரேலியர்கள் அனுபவிக்கிற அனேகப் பலன்கள், வரிகள் மூலமாகவே சாத்தியமாகின்றன. வரிகளை, அரசாங்கம் நிதியளிக்கிற சுகாதாரக்கவனிப்பு மற்றும் கல்வி, பாதுகாப்பு, சாலைகள் மற்றும் இருப்புப்பாதைகள் மற்றும் சமுதாயப் பாதுகாப்பு உள்ளிட்ட சேவைகளில் செலவிடுகிறார்கள்.

உழைத்து வரிகளைச் செலுத்துவதன் மூலமாக, நீங்கள் இத்தகைய முக்கியமான சேவைகளை அவுஸ்திரேலிய சமுதாயத்திற்கு வழங்க நீங்கள் துணைபுரிகிறீர்கள். சேவைகளுக்குப் பணம் கொடுப்பதற்காக, மாகாண மற்றும் பிரதேச அரசுகளும், உள்ளாட்சி மன்றங்களும் கூட வரிகளை வசூல் செய்கின்றன. இச்சேவைகள், இன்றைக்கு இருக்கும் அமைதியானதும், வளமானதுமான நாடாக அவுஸ்திரேலியாவை ஆக்க உதவுகின்றன.



# பகுதி மூன்று

## அவுஸ்திரேலியாவில் இருக்கும் அரசாங்கமும் சட்டமும்

# அவுஸ்திரேலியாவில் இருக்கும் அரசாங்கமும் சட்டமும்

குடியுரிமைச் சடங்கில், நீங்கள் அவுஸ்திரேலிய சட்டங்களைக் கடைபிடித்து, அவற்றுக்குக் கீழ்ப்படிய உறுதிமொழியளிக்கிறீர்கள். அவுஸ்திரேலியாவின் அரசாங்க அமைப்பு, ஒரு பாராளுமன்ற ஜனநாயகமாகும். இந்த அரசாங்க அமைப்பையும், நமது பாராளுமன்ற ஜனநாயகத்தில் எவ்விதமாகச் சட்டங்களை இயற்றுகிறார்கள் என்பதையும், அவற்றை எவ்விதமாக நிர்வகிக்கிறார்கள் என்பதையும் புரிந்து கொள்வது உங்களுக்கு முக்கியமானதாகும். ஒரு குடிமகனாக, நீங்கள் எவ்விதம் நாட்ட நடத்துவதில் குரல் கொடுப்பீர்கள் என்பதைப் புரிந்து கொள்வதும் முக்கியமானதாகும்.

## நான் எவ்விதம் குரல் கொடுப்பது?

### வாக்களித்தல்

பகுதி 2 இல் கோடிட்டுக் காண்பித்துள்ளபடி, அவுஸ்திரேலியாவில், 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய குடிமக்கள், மத்திய, மாகாண, மற்றும் பிரதேசத் தேர்தல்களிலும், அரசியலமைப்பு மாற்றம் குறித்த தீர்மானத்திலும் வாக்களிக்க பதிவு செய்துகொண்டாக வேண்டும்.

அவுஸ்திரேலிய பாராளுமன்ற ஜனநாயகத்தில், பாராளுமன்றத்தில் தங்களுக்குப் பிரதிநிதியாகச் செயல்பட ஒருவருக்கு வாக்களிப்பதன் மூலமாக எவ்விதம் அவுஸ்திரேலியாவை ஆளுகிறார்கள் என்பதில் குடிமக்கள் குரல் கொடுக்க முடியும். நீங்கள் சரியான முறையில் பதிவுசெய்து கொள்ளவில்லை என்றால், உங்களால் தேர்தலொன்றில் வாக்களிக்க இயலாது.

வாக்களிப்பது என்பது அவுஸ்திரேலிய தேர்தல்களில், அல்லது அரசியலமைப்பு மாற்றம் குறித்தத் தீர்மானங்கள் இருந்தால், அவற்றில் கட்டாயமானதாகும்.

அவுஸ்திரேலிய தேர்தல் ஆணையம் (AEC) ஒரு காமன்வெல்த் முகமையாகும், இதுவே மத்தியத் தேர்தல்களையும், தீர்மானங்களையும் நடத்துவதற்கும், காமன்வெல்த் தேர்தல் பட்டியலைப் பராமரிப்பதற்கும் பொறுப்பானதாகும். இந்த □□□ அரசாங்க சார்பற்றதாகும். அரசியல் கட்சிகளோ அல்லது அரசாங்கத்தில் இருப்பவர்களோ, □□□ யின் முடிவுகளில் தலையிட முடியாது.

அவுஸ்திரேலியாவில், தேர்தல் ஒன்றில் வாக்களிப்பது என்பது இரகசிய ஓட்டெடுப்பு முறையிலானதாகும், ஆகவே எந்த வாக்காளருக்கும் வாக்களிப்பதற்கு உங்களுக்கு சுதந்திரமும், பாதுகாப்பும் உண்டு. நீங்கள் யாருக்கு வாக்களித்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் தெரிவு செய்தாலொழிய, வேறு எவரும் தெரிந்துகொள்ள அனுமதியில்லை. நீங்கள் தேர்தல் ஒன்றில் வாக்களிக்கவில்லை என்றாலோ அல்லது வாக்களிக்காமல் இருந்ததற்கு சரியான காரணம் இல்லை என்றாலோ, நீங்கள் அபராதம் செலுத்த வேண்டியிருக்கலாம். கட்டாய வாக்களிப்பென்பது, யார் ஆட்சி செய்வது மற்றும் பாராளுமன்றத்தில் அவர்களுக்கு யார் பிரதிநிதியாக இருப்பது என்பதில் மக்கள் குரல் கொடுக்க முடியும் என்பதைப் பார்த்துக் கொள்வதற்கேயாகும்.

### உங்களது பிரதிநிதிகளிடம் விஷயங்களை எழுப்புதல்

அவுஸ்திரேலியக் குடிமக்கள், அரசாங்கக் கொள்கை குறித்து அவர்களுக்கு இருக்கிற கவலைகளை எழுப்புவதற்கு அவர்களது தேர்ந்தெடுத்த பிரதிநிதியைத் தொடர்பு கொள்ளலாம். இந்த விதத்தில், ஒரு சட்டங்களை இயற்றுவதிலும், ஒரு அரசாங்கத்தின் கொள்கைகளிலும், எல்லா அவுஸ்திரேலியர்களும் குரல் கொடுக்க முடியும். ஒரு சட்டத்தை மாற்ற வேண்டியிருப்பதாக குடிமக்களில் ஒருவர் அவரது தேர்ந்தெடுத்த பிரதிநிதியிடம் சொல்கிற பட்சத்தில், அவர் என்ன ஆலோசனை சொல்கிறார் என்பதை தேர்ந்தெடுத்துள்ள அந்தப் பிரதிநிதி பரிசீலிக்க வேண்டும்.

# நமது அரசாங்க அமைப்பை நாம் எவ்விதம் நிலைநாட்டுகிறோம்?

## கூட்டமைப்பு

பிரிட்டிஷ் குடியேற்றத்திற்குப் பிறகும், 1901 ஆம் ஆண்டிற்கு முன்னும், அவுஸ்திரேலியா ஆறு தனித்தனியான, சுய ஆட்சி பெற்ற காலனிகளால் ஆனதாகவே இருந்தது.

ஒவ்வொரு காலனிக்கும், அதற்கென, பாதுகாப்பு, குடிவரவு, தபால், வர்த்தகம் மற்றும் போக்குவரத்து சம்பந்தமாக, சொந்தமாக அரசியலமைப்பும், சட்டங்களும் இருந்தன. ஆயினும், இது காலனிகளுக்கு இடையே சிரமங்களை உண்டாகியது. உதாரணமாக, காலனிகளுக்கு இடையே நடைபெற்ற வர்த்தகமும், போக்குவர்த்தும், அதிக செலவு பிடிப்பதாகவும், மெதுவாகவும் இருந்தது, அதோடு எல்லைகளுக்கு இடையே சட்டத்தை அமல்படுத்துவதும் சிரமமானதாகவே இருந்தது. அத்தனித்தனி காலனிகளிடத்தில், வலுவிழந்த பாதுகாப்பு அமைப்பே இருந்தது.

அதன் விளைவாக, மக்கள் காலனிகளை இணைத்து, ஒரே ஒற்றை தேசமாக ஆக்க விரும்பினார்கள். அதி முக்கியமாக, அவுஸ்திரேலியாவின் தேசிய அடையாளம் உருவாக ஆரம்பித்தது. விளையாட்டு அணிகள் சர்வதேச அளவில் அவுஸ்திரேலியாவின் பிரதிநிதியாகச் செயல்பட்டன, அதோடு அவுஸ்திரேலியாவின் கலாச்சாரம், பிரபல பாடல்கள், செய்யுள்கள், கதைகள் மற்றும் கலையில் உருவாகி வந்தது.

தேசத்தை இணைப்பது என்பது ஒரு சிரமமான பணியாகும், ஆனால் காலப்போக்கில், ஒரே அவுஸ்திரேலியா என்ற யோசனை உண்மையாகிப் போனது. ஜனவரி 1, 1901 அன்று, மாகாணங்களின் கூட்டாட்சியின் கீழ் காலனிகளை ஒன்றிணைத்து, அவுஸ்திரேலிய காமன்வெல்த் என்றானது.


## அவுஸ்திரேலிய அரசியலமைப்பு

*அவுஸ்திரேலிய காமன்வெல்த் அரசியலமைப்புச் சட்டம் 1900* (அவுஸ்திரேலிய அரசியலமைப்பு) தான் அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கான அடிப்படை விதிகளை அமைத்துத் தருகிற சட்டப்பூர்வ ஆவணமாகும். அவுஸ்திரேலிய அரசியலமைப்பை உள்ளபடி, 1900 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பாராளுமன்றச் சட்டத்தின் ஒரு பகுதியாகவே நிறைவேற்றினார்கள். ஜனவரி 1, 1901 ஆம் ஆண்டில், அவுஸ்திரேலிய அரசியலமைப்பு அமலுக்கு வந்தது, அவுஸ்திரேலிய காலனிகள் ஒரே சுதந்திரமான தேசமாகியது: அதுவே அவுஸ்திரேலிய காமன்வெல்த் ஆகும்.

அவுஸ்திரேலிய அரசியலமைப்பு தான், பிரதினிதிகள் சபையையும், செனட் செபையையும் கொண்ட, அவுஸ்திரேலிய காமவெல்த் பாராளுமன்றத்தை அமைத்தது. இந்த அரசியலமைப்பு, அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றத்தையும் அமைத்தது, இதற்குத் தான் அவுஸ்திரேலிய சட்டங்களைப் பயன்படுத்துவற்கும், பொருள்படுத்துவதற்கும் உச்சகட்ட அதிகாரம் இருக்கிறது.

அவுஸ்திரேலிய மக்கள், 1967 ஆம் ஆண்டில், பூர்வீகக் குடிகளை மக்கட்தொகைக் கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்க 90 சதவீத மக்கள் 'ஆம்' என்று சொன்ன தீர்மானம் போன்று, தீர்மானம் ஒன்றுக்கு வாக்களிப்பதன் வாயிலாக அவுஸ்திரேலிய அரசியலமைப்பை மாற்றிக்கொள்ளலாம்.

தீர்மானம் ஒன்றில், அவுஸ்திரேலிய அரசியலமைப்பை மாற்றுவதற்கு 'இரட்டைப் பெரும்பான்மை' இருந்தாக வேண்டும். அதாவது, பெரும்பான்மை மாகாணங்களில் இருக்கிற பெரும்பான்மை வாக்காளர்களும், தேசம் முழுவதிலும் இருக்கிற பெரும்பான்மை வாக்காளர்களுமாகிய இருவரும், அம்மாற்றத்திற்காக வாக்களித்தாக வேண்டும்.




அவுஸ்திரேலிய அரசியலமைப்பு

## அரசாங்க அதிகாரத்தை எவ்விதம் கட்டுப்படுத்துகிறார்கள்?

அவுஸ்திரேலிய அரசியலமைப்பு, எல்லா அதிகாரத்தையும் ஒருவரே, ஒரு குழுவே பிடித்து வைத்துக் கொள்வதைத் தடுப்பதற்காக, அரசாங்க அதிகாரத்தை, சட்டம் இயற்றும் (பாராளுமன்றம்), நிர்வாகம் செய்யும் (உதாரணமாக பிரதமர் மற்றும் அமைச்சரவை) மற்றும் நீதிமன்ற அதிகாரங்கள் (நீதிபதிகள்) ஆகியோருக்கிடையே பகிர்ந்து கொடுக்கிறது.

### சட்டம் இயற்றும் அதிகாரம்

சட்டம் இயற்றும் அதிகாரம் என்பது சட்டங்களை உருவாக்குவதற்கான அதிகாரமாகும். அவுஸ்திரேலியாவில், பாராளுமன்றத்திற்குத் தான் சட்டங்களை இயற்றவும், மாற்றவும் அதிகாரம் உள்ளது. பாராளுமன்றமானது, அவுஸ்திரேலிய மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளால் ஆனதாகும்.

### நிர்வாக அதிகாரம்

நிர்வாக அதிகாரம் என்பது, சட்டங்களைப் புழக்கத்தில் கொண்டுவருவதற்கான அதிகாரமாகும். நிர்வாகிகளில், பிரதமர் அவுஸ்திரேலிய அரசாங்க அமைச்சர்கள் மற்றும் கவர்னர் ஜெனரல் ஆகியோர் அடங்குவர். அமைச்சர்களே அரசாங்கத் துறைகளுக்குப் பொறுப்பானவர்களாவர்.

### நீதித்துறை அதிகாரம்

நீதிபதிகளுக்கே சட்டத்திற்குப் பொருள் கொடுத்து அதை அமல்படுத்துவதற்கான அதிகாரம் உள்ளது. நீதிமன்றங்களும், நீதிபதிகளும், பாராளுமன்றம் மற்றும் அரசாங்கத்தைச் சாராதவர்களாவர்.

இத்தகைய அதிகாரங்களை, அவுஸ்திரேலிய அரசியலமைப்பில் எழுதியிருக்கிறார்கள்.

## அவுஸ்திரேலியாவின் தலைமை அதிகாரி யார்?

அவுஸ்திரேலியாவின் தலைமை அதிகாரி, அவுஸ்திரேலிய இராணி ஆவார், அவரே மகா கனம் பொருந்திய இராணி 2 ஆம் எலிசபெத் ஆவார்.

அவுஸ்திரேலிய இராணி தான், அவுஸ்திரேலிய பிரதமரின் ஆலோசனையின் பேரில், அவுஸ்திரேலியாவில் கவர்னர் ஜெனரலாக தனது பிரதிநிதியை அமர்த்துகிறார். கவர்னர் ஜெனரல், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சார்பில்லாமல் செயல்படுகிறார். இராணிக்கு, அரசாங்கத்தின் அன்றாடப் பணிகளில் பங்கிருக்காது.

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு கவர்னர் இருக்கிறார், அவர் கவர்னர்-ஜெனரலை ஒத்ததோர் பாங்கில், இராணியின் பிரதிநிதியாகச் செயல்படுகிறார்.

### அரசியலமைப்பு சார்ந்த முடியாட்சி

அவுஸ்திரேலியா ஒரு அரசியலமைப்பு சார்ந்த முடியாட்சியாகும், இதன் பொருள், இராணி தான் அவுஸ்திரேலியிஆவின் தலைமை நிர்வாகியாவார், ஆனால் அவர் அரசியலமைப்பிற்கு ஏற்பவே செயல்பட வேண்டும். இராணி அவுஸ்திரேலியாவில் வசிப்பதில்லை என்பதால், அவரது அதிகாரங்களை அவுஸ்திரேலியாவில் இருக்கிற கவர்னர்-ஜெனரலுக்கு பகிர்ந்தளித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு, தனித்துவமாக அவுஸ்திரேலியா சார்ந்த ஒரு விதத்தில் பிரிட்டிஷ் மற்றும் வட அமெரிக்கப் பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கிறது. அவுஸ்திரேலிய அமைப்பில், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் தலைவர் தான் பிரதமராவார்.



மகா கனம் பொருந்திய இராணி 2 ஆம் எலிசபெத்

### கவர்னர் ஜெனரலின் பங்கு

கவர்னர் ஜெனரல் அரசாங்கத்தின் ஒரு அங்கமல்ல, அதோடு அவர் நடுநிலையானவராகவே இருந்தாக வேண்டும்.

கவர்னர்-ஜெனரலின் பங்கில் அடங்குபவை:

- அவுஸ்திரேலிய பாராளுமன்றம் நிறைவேற்றுகிற அனைத்து மசோதாக்களிலும் கையொப்பமிட்டு சட்டமாக்குதல் (இதைத் தான் அரச இசைவு என்கிறோம்)
- சடங்காச்சாரமான கடமைகளைச் செய்து முடிப்பது
- அவுஸ்திரேலிய அரசாங்கம் மற்றும் அதன் அமைச்சர்கள், மத்திய நீதிபதிகள் மற்றும் மற்ற அதிகாரிகளின் நியமனத்தை அங்கீகரித்தல்
- மத்திய தேர்தலுக்கான நடைமுறையை ஆரம்பித்தல்
- அவுஸ்திரேலிய பாதுகாப்புப் படையின் தலைமைக் கட்டுப்பாட்டுை அதிகாரியாகச் செயல்படுதல்

கவர்னர் ஜெனரலுக்கு, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே உபயோகிக்க முடிகிற 'தனி அதிகாரங்கள்' என்று சொல்கிற பிரத்தியேக அதிகாரங்களும் இருக்கின்றன.

## அவுஸ்திரேலிய தலைவர்களில் ஒருசிலர் யாவர்?

### தலைமை அரசு நிர்வாகி

அவுஸ்திரேலிய இராணி

### கவர்னர் ஜெனரல்

அவுஸ்திரேலிய அரசு தலைமை நிர்வாகியின் பிரதிநிதி

### கவர்னர்

ஒவ்வொரு அவுஸ்திரேலிய மாகாணத்திலும் இருக்கிற அரசு தலைமை நிர்வாகியின் பிரதிநிதி

### பிரதமர்

அவுஸ்திரேலிய அரசாங்கத் தலைவர்

### முதல்வர்

மாகாண அரசாங்கத் தலைவர்

### முதலமைச்சர்

பிரதேச அரசாங்கத் தலைவர்

### அரசாங்க அமைச்சர்

அரசாங்கத்தின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருக்க ஒரு அரசாங்கத் தலைவர் தெரிவு செய்துள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர்

### பாராளுமன்ற உறுப்பினர் (MP)

இவர், அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில், அல்லது மாகாணப் பாராளுமன்றத்தில், அவுஸ்திரேலிய மக்கள் தெரிந்தெடுத்த பிரதிநிதியாவார்

### செனேட்டர்

இவர், அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில், ஒரு மாகாணம் அல்லது பிரதேசத்தின் மக்கள் தெரிந்தெடுத்த பிரதிநிதியாவார்

### மேயர் அல்லது ஷையர் பிரசிடெண்ட்

உள்ளாட்சி அரசின் தலைவர்

### கவுன்சிலர்

உள்ளாட்சி மன்றம் ஒன்றின் மக்கள் தெரிந்தெடுத்த உறுப்பினர்

## அவுஸ்திரேலியாவை எவ்விதம் அரசாளுகிறார்கள்

### அவுஸ்திரேலிய அரசாங்கம்

அவுஸ்திரேலிய அரசாங்கத்தை கூட்டாட்சி அரசாங்கம் அல்லது காமன்வெல்த் அரசாங்கம் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் என்பது, அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்களால் ஆனது, அது இரண்டு அவைகளைக் கொண்டது:

- பிரதிநிதிகள் சபை
- செனேட்.

மத்திய தேர்தல் ஒன்றில், அவுஸ்திரேலிய குடிமக்கள், பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவைக்குமான பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க வாக்களிக்கிறார்கள்.

## பிரதிநிதிகள் சபை

பிரதிநிதிகள் சபை என்பது அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் இருக்கிற இரு அவைகளில் ஒன்றாகும். பிரதிநிதிகள் சபையின் மற்ற பெயர்கள், கீழ் அவை அல்லது மக்கள் அவை ஆகும்.

அவுஸ்திரேலியாவை மத்திய தேர்தல் தொகுதிகளாகப் பிரித்துள்ளார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் (MPs) அவர்களது தேர்தல் தொகுதியில் மக்களுக்குப் பிரதிநிதிகளாகச் செயல்படுகிறார்கள்.

ஒவ்வொரு மாகாணத்திற்கும், பிரதேசத்திற்குமான MP-களின் எண்ணிக்கை, அந்தந்த மாகாணம் அல்லது பிரதேசத்தில் இருக்கிற மக்களின் எண்ணிக்கை அடிப்படையிலானதாகும். ஒட்டுமொத்தத்தில், பிரதிநிதிகள் சபைக்கு 150-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களும், செனேட்டர்களும், அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் இயற்றுகிற புதிய சட்ட முன்மடிவுகளை விவாதிக்கிறார்கள் பிரதிநிதிகள் சபையின் பங்கு, புதிய சட்டங்களுக்கான முன்மடிவுகளில் அல்லது சட்டங்களில் செய்கிற மாற்றங்களைப் பரிசீலித்து, விவாதித்து, வாக்களிப்பதும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை விவாதிப்பதுமாகும்.



பிரதிநிதிகள் சபை

## செனேட்

செனேட் என்பது, அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் இருக்கிற இன்னொரு அவையாகும். செனேட்டை சில நேரங்களில் மேல் அவை என்றும், மறுஆய்வு அவை என்றும் அல்லது மாகாண அவை என்றும் சொல்கிறார்கள். ஒவ்வொரு மாகாணத்தில் இருந்தும், வாக்காளர்கள், செனேட்டில் தங்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்க செனேட்டர்களைத் தெரிவு செய்கிறார்கள் மாகாணங்களின் அளவு அல்லது மக்கட்தொகையைப் பொருட்படுத்தாமல், அனைத்து மாகாணங்களுக்கும் சம அளவில் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். மொத்தம் 76 செனேட்டர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாகாணமும் 12 செனேட்டர்களைத் தெரிவு செய்கிறது, அவுஸ்திரேலிய தலைநகரப் பிரதேசமும், வடக்குப் பிரதேசமும் இரண்டிரண்டு செனேட்டர்களைத் தெரிவு செய்கின்றன.

செனேட்டர்கள், புதிய சட்டங்களுக்கான முன்மடிவுகளில் அல்லது சட்டங்களில் செய்கிற மாற்றங்களைப் பரிசீலித்து, விவாதித்து, வாக்களிக்கிறார்கள் அதோடு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை விவாதிக்கிறார்கள்.



செனேட்

## மாகாண மற்றும் பிரதேச அரசாங்கம்

அவுஸ்திரேலியாவில் ஆறு மாகாணங்களும், இரண்டு பெருநிலப் பிரதேசங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு மாகாண அரசாங்கத்திற்கும் அதற்கென்ற பாராளுமன்றமும் அரசியலமைப்பும் இருக்கின்றன. மாகாண மற்றும் பிரதேச அரசாங்கங்கள் அவற்றின் தலைனகரங்களின் அடிப்படையிலானவையாகும். மாகாண அரசின் தலைவர் முதல்வர் ஆவார், பிரதேச அரசின் தலைவர் முதலமைச்சர் ஆவார்.

மாகாண அரசாங்கங்கள், அவுஸ்திரேலிய அரசாங்கத்தைப் போன்று அதே வித்ததிலேயே செயல்படுகின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும், கவர்னர் ஒருவரே அவுஸ்திரேலிய இராணிக்குப் பிரதிநிதியாகச் செயல்படுகிறார். வடக்குப் பிரதேசத்தில், கவர்னர் ஜெனரல் ஒரு நிர்வாகியை நியமிக்கிறார். அந்த நிர்வாகியின் பங்கும், பொறுப்புகளும், மாகாண கவர்னரின் பங்கு மற்றும் பொறுப்புகளை ஒத்ததேயாகும்.

மாகாணங்களுக்கு அரசியலமைப்பு அங்கீகரித்த உரிமைகள் உள்ளன, பிரதேசங்களுக்கு அப்படியல்ல. மாகாணங்களுக்கு, தங்களது சொந்த உரிமையில் சட்டங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் உள்ளது, அதேவேளையில் சுய ஆட்சியுள்ள பிரதேச சட்டத்தை எந்த நேரத்திலும் அவுஸ்திரேலிய அரசாங்கம் மாற்றிக் கொள்ளலாம் அல்லது திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

மாகாண மற்றும் பிரதேசத் தேர்தல்களில், அவுஸ்திரேலிய குடிமக்கள் தங்களது பகுதிக்கானதோர் பிரதிநிதியைத் தெரிவு செய்ய வாக்களிக்கிறார்கள். இப்பிரதிநிதிகள், உரிய மாகாண அல்லது பிரதேச பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகிறார்கள்.

## உள்ளாட்சி அரசாங்கம்

மாகாணங்களையும், வடக்கு பிரதேசத்தையும் உள்ளாட்சி அரசாங்கப் பகுதிகளாகப் பிரித்து வைத்துள்ளார்கள், அவற்றை நகரங்கள், ஷையர்கள், ஊர்கள் அல்லது நகராட்சிகள் என அழைக்கலாம். ஒவ்வொரு பகுதிக்கும் அதற்கென சொந்த உள்ளாட்சி மன்றம் இருக்கிறது. மன்றங்கள் தான் தங்களது உள்ளாட்சி சமுதாயத்திற்கு சேவைகளைத் திட்டமிடுவதற்கும், செய்து கொடுப்பதற்கும் பொறுப்பானதாகும். ஒவ்வொரு உள்ளாட்சி அரசாங்கப் பகுதியிலும் இருக்கிற குடிமக்கள் தங்களது உள்ளாட்சி மன்றங்களுக்கு வாக்களிக்கிறார்கள்.

# இந்த மூன்றடுக்கு அரசாங்கம் என்ன செய்கிறது?

இந்த மூன்று அடுக்கு அரசாங்கங்களுக்கு இடையேயான முக்கிமான வித்தியாசமே, ஒருசல பொறுப்புகள் ஒன்றன் மீது ஒன்று அமைவதாக இருக்கலாம் என்கிற போதிலும், பொதுவாக, ஒவ்வொரு அரசாங்க அடுக்கும் வெவ்வேறு சேவைகளை வழங்குகின்றன.

| அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் பொறுப்புகளாவன: |
|---|
| வரி விதித்தல் |
| தேசியப் பொருளாதார மேலாண்மை |
| குடிவரவு மற்றும் குடியுரிமை |
| வேலைவாய்ப்பு உதவி |
| தபால் சேவைகள் மற்றும் தகவல்தொடர்புக் கட்டமைப்பு |
| சமுதாயப் பாதுகாப்பு (ஓய்வூதியங்கள் மற்றும் குடும்ப ஆதரவு) |
| பாதுகாப்பு |
| வர்த்தகம் மற்றும் வணிகம் |
| விமான நிலையங்கள் மற்றும் விமான பாதுகாப்பு |
| வெளி விவகாரங்கள் (மற்ற நாடுகளுடனான உறவுகள்). |

| மாகாண மற்றும் பிரதேச அரசாங்கங்களின் முதன்மையான பொறுப்புகளாவன: |
|---|
| மருத்துவமனைகள் மற்றும் சுகாதாரப் பணிகள் |
| பாடசாலைகள் |
| சாலைகள் மற்றும் தொடர்வண்டிகள் |
| வனம் |
| காவல்துறை மற்றும் அவசரகால ஊர்தி சேவைகள் |
| பொதுப்போக்குவரத்து. |

| உள்ளாட்சி அரசாங்கங்களின் (மற்றும் அவுஸ்திரேலிய தலைநகரப் பிரதேச அரசாங்கத்தின்) பொறுப்புகளாவன: |
|---|
| சாலை அடையாளங்கள், போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் |
| உள்ளூர்ச் சாலைகள், நடைபாதைகள், பாலங்கள் |
| வடிகால்கள் |
| பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், நீச்சல் குளங்கள், விளையாட்டுப்போட்டி அரங்குகள் |
| கூடாரம் அமைக்கும் திடல்கள், நாடோடி வண்டிப் பூங்காக்கள் |
| உணவு மற்றும் இறைச்சி ஆய்வு |
| சப்தம் மற்றும் விலங்கினக் கட்டுப்பாடு |
| குப்பை சேகரிப்பு |
| உள்ளூர் நூலகங்கள், அரங்குகள் மற்றும் சமுதாய மையங்கள் |
| ஒருசில குழந்தைப் பராமரிப்பு மற்றும் வயதானோர் பராமரிப்புப் பிரச்சினைகள் |
| கட்டிட அனுமதிகள் |
| சமுதாயத் திட்டமிடுதல் |
| உள்ளூர் சுற்றுச்சூழல் பிரச்சினைகள். |

## அவுஸ்திரேலியாவை அரசாளும் விதத்தில் அரசியல் கட்சிகள் எவ்விதம் பங்காற்றுகின்றன?

ஒரு அரசியல் கட்சி என்பது ஒரு நாட்டை எவ்விதம் ஆட்சி புரிய வேண்டும் என்பது குறித்து ஒரே விதமான யோசனைகளைப் பகிர்ந்து கொள்கிற மக்கள் குழுவாகும். அவுஸ்திரேலியாவில் இருக்கிற முதன்மையான அரசியல் கட்சிகள், அவுஸ்திரேலய சுதந்திரக் கட்சி, தொழிலாளர் கட்சி, தேசியவாதிகள் மற்றும் அவுஸ்திரேலிய பசுமைவாதிகள் ஆகியவையாகும்.

பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாவர். சில எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்களாவர், அதோடு அவரகளைச் 'சுயேட்சைகள்' என்று சொல்கிறோம்.

அவுஸ்திரேலியாவில், மக்கள் அரசியல் கட்சியில் சேர விரும்பினால் அவர்கள் சுதந்திரமாகச் சேர்ந்து கொள்ளலாம்.

## அவுஸ்திரேலிய அரசாங்கத்தை எவ்விதம் அமைக்கிறார்கள்?

மத்திய தேர்தலுக்குப் பிறகு, பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சி அல்லது கூட்டணிக்க்சிகளே பொதுவாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தை அமைக்கிறார்கள். இந்தக் கட்சியின் தலைவரே, அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் தலைவர்: பிரதமர் ஆகிறார்.

மத்திய தேர்தலுக்குப் பிறகு, பிரதிநிதிகள் சபையில் இரண்டாவது அதிக எண்ணிக்கை உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சி அல்லது கூட்டணிக் கட்சிகள் எதிர்கட்சியாக அமைகிறது. அதன் தலைவரையே எதிர்க்கட்சித் தலைவர் என்கிறோம்.

பிரதமர், பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் அல்லது செனேட்டர்களை அவுஸ்திரேலிய அரசாங்கத்தில் அமைச்சர்களாக சிபாரிசு செய்கிறார். கவர்னர் ஜெனரல், பிரதமர் மற்றும் அமைச்சர்களின் நியமனத்தை அங்கீகரிக்கிறார்.

அரசாங்க அமைச்சர்களே, வேலைவாய்ப்பு, உள்துறை அல்லது நிதி போன்ற, அரசாங்கத்தின் ஒரு பகுதிக்கு (இதை துறை என்கிறோம்) பொறுப்பானவர்களாவர். மிக முக்கிய துறைகளையுடைய அமைச்சர்கள் தான் கேபினட்டை அமைக்கிறார்கள், இது தான் அரசாங்கத்தின் அதி முக்கிய முடிவுகளை எடுக்கும் அமைப்பாகும்.

## சட்டங்களை எவ்விதம் இயற்றுகிறார்கள்?

அவுஸ்திரேலிய பாராளுமன்றத்திற்கு, தேச நலனில் அவுஸ்திரேலியாவில் சட்டத்தை இயற்றவோ அல்லது மாற்றவோ அதிகாரம் உள்ளது.

அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் புதிய சட்டம் ஒன்றை அறிமுகம் செய்ய அல்லது ஏற்கெனவே இருக்கும் ஒன்றை மாற்ற முன்வந்தால், இந்த முன்மடிவை 'மசோதா' என்கிறோம்.

பிரதிநிதிகள் சபை அல்லது செனேட், அந்த மசோதாவை ஒப்புக்கொள்கிறார்களா இல்லையா என்பதைப் பரிசீலித்து, விவாதித்து, வாக்களிக்கிறார்கள்.

பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் இருக்கும் பெரும்பான்மையான உறுப்பினர்கள், அந்த மசோதாவை ஆதரித்தால், அது கவர்னர் ஜெனரலிடம் செல்கிறது.

கவர்னர் ஜெனரல், அது ஒரு சட்டமாகும் வகையில் அதில் கையொப்பமிடுகிறார்.
இதைத் தான் 'அரச இசைவு' என்கிறோம்.

இதே விதத்தில் மாகாண மற்றும் பிரதேச பாராளுமன்றங்களும் தங்களது சட்டங்களை இயற்றுகின்றன.




# சட்டங்களை எவ்விதம் அமல்படுத்துகிறார்கள்?

## நீதிமன்றங்கள்

அவுஸ்திரேலியாவில் இருக்கிற நீதிமன்றங்கள் சுதந்திரமானவையாகும். ஒருவர் சட்டத்தை மீறியிருக்கிறாரா இல்லையா என்பதையும், அதற்கான அபராதத்தையும் நீதிமன்றமே முடிவு செய்யும். நீதிமன்றங்கள் அவற்றின் முடிவை, அவற்றுக்கு முன் வைக்கப்பெறும் தடயத்தின் அடிப்படையிலேயே எடுக்கும்.

## நீதிபதிகள் மற்றும் மாவட்ட நீதிபதிகள்

நீதிபதி அல்லது மாவட்ட நீதிபதி தான் ஒரு நீதிமன்றத்தில் மிக உயர்ந்த அதிகாரியாவார். அவர்கள் சுதந்திரமானவர்கள் அதோடு என்ன முடிவெடுக்க வேண்டும் எனட்தை எவரும் அவர்களுக்குச் சொல்ல முடியாது.

நீதிபதிகளையும், மாவட்ட நீதிபதிகளையும், அரசாங்கமே நியமிக்கிறது, ஆனால் நீதிபதிகளின் முடிவுகள் சம்மதி இல்லையென்கிற பட்சத்தில் அவர்களின் வேலைகளை அரசாங்கத்தால் பறிக்க முடியாது.

## நடுவர் மன்றங்கள்

அவுஸ்திரேலிய நீதிமன்ற அமைப்பில், ஒரு நீதிமன்றத்தில் குற்றவாளி எனக் காணப்பெறாத வரையில் மக்களை குற்றமிழைக்காதவர்கள் என்றே கருதுகிறோம். ஒவ்வொருவருக்கும், நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஒருவரைப் பிரதிநிதியாக வைத்துக் கொள்வதற்கான உரிமை உள்ளது.

சில வழக்குகளில், ஒரு நீதிமன்றம், ஒருவர் சட்டத்தை மீறியிருக்கிறாரா என்பதை முடிவு செய்வதற்காக ஒரு நடுவர் மன்றத்தை உபயோகிக்கும். அந்த நடுவர் மன்றத்தின் பங்கு, ஒருவர் குற்றமற்றவரா அல்லது குற்றவாளியா என்பதை முடிவு செய்வதேயாகும். நடுவர் மன்றம் என்பது, பொதுவான மக்கட்தொகையில் இருந்து, தற்போக்காகத் தெரிவு செய்த சாதாரண அவுஸ்திரேலியக் குடிமக்களைக் கொண்ட்தோர் குழுவாகும். நீதிபதி சட்டத்தை நடுவர் மன்றத்திற்கு விளக்கிச் சொல்கிறார். ஒரு குற்றவியல் வழக்கு விசாரணையில், ஒருவரை குற்றமுள்ளவர் என்பதாக நடுவர் மன்றம் காண்கிற பட்சத்தில், நீதிபதி அதற்கான தண்டனையை முடிவு செய்கிறார்.

## காவல்துறை

காவல்துறை, சமுதாயத்தில் அமைதியையும், ஒழுங்கையும் பராமரிக்கிறது. உயிரையும், சொத்துக்களையும் பேணிப் பாதுகாப்பது அவர்களது வேலையாகும். அவர்கள் அரசாங்கம் சாராதவர்களாவர். எவரோ ஒருவர் சட்டத்தை மீறிவிட்டதாக காவல்துறை நம்புகிற பட்சத்தில், அவர்கள் அவரைக் கைதுசெய்து, அவர்களை நீதிமன்றத்தில் சட்டத்தின் முன் கொண்டு வரலாம். காவல்துறையினர் அதற்கான தடையத்தைக் கொடுக்கலாம், ஆனாலும், ஒருவர் குற்றமுள்ளவரா இல்லையா என்பதை நீதிமன்றமே முடிவு செய்யும்.

மாகாணங்களுக்கும், வடக்குப் பிரதேசத்திற்கும் அவற்றுக்கான சொந்த காவல் படையுள்ளது. அவர்கள், மாகாண மற்றும் பிரதேச சட்டங்களின் கீழ் குற்றங்களைக் கையாளுகிறார்கள்.

அவுஸ்திரேலியாவிற்கு, அவுஸ்திரேலிய மத்திய காவல்துறை (□□□) என்று சொல்கிற தேசிய காவல் படையும் உள்ளது. இந்த □□□ மத்திய சட்டங்களுக்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்கிறது, உதாரணமாக, போதை மருந்து கடத்தல், தேசியப் பாதுகாப்பிற்கு எதிரான குற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு எதிரான குற்றங்கள் ஆகியவை. □□□ தான், அவுஸ்திரேலிய தலைநகரப் பிரதேசத்தில் இருக்கிற பொதுவான காவல்துறைப் பணிகளுக்குப் பொறுப்பானதாகும்.

அவுஸ்திரேலியாவில் காவல்துறையும், சமுதாயமும் நல்லதோர் உறவில் இருக்கின்றன. உங்கள் பகுதியைச் சேர்ந்த காவல்துறையிடம் நீங்கள் குற்றங்களை அறிவித்து, உதவியை நாடிக்கொள்ளலாம்.

அவுஸ்திரேலியாவில், காவல்துறையினருக்கு இலஞ்சம் கொடுப்பது ஒரு கடும் குற்றமாகும். காவல்துறை அதிகாரி ஒருவருக்கு இலஞ்சம் தர முன்வருவதும் குற்றமாகும்.

## அவுஸ்திரேலியாவில் குற்றவியல் குற்றங்கள்

அவுஸ்திரேலியாவில் இருக்கிற சட்டங்களைத் தெரிந்து வைத்துக் கொள்வது உங்களுக்கு முக்கியமானதாகும். நீங்கள் அவுஸ்திரேலிய சட்டம் ஒன்றை, அதைப் பற்றித் தெரியாமல் மீறி நடந்தால், உங்களுக்குத் தண்டனை விதிக்கப்பெறலாம், ஏனென்றால் தெரியாமல் இருப்பதற்கு மன்னிக்கத்தக்கதல்ல.

மிகக் கடுமையான குற்றங்களில் சிலவற்றில், கொலை, அடிதடி, பாலியல் வன்முறை, மக்கள் அல்லது சொத்துக்களுக்கு எதிரான வன்முறை, ஆயுதமேந்திய கொள்ளை அல்லது திருட்டு, குழந்தைகள் அல்லது சட்டப்பூர்வமாக ஒப்புதல் தரக்கூடிய வயதிற்குக் கீழான வயதுடைய இளையவர்களோடு பாலியல் உறவு கொள்வது, மோட்டார் வாகனம் ஒன்றை அபாயகரமாக ஒட்டுவது, சட்டவிரோத போதை மருந்துகளை வைத்திருப்பது மற்றும் மோசடி ஆகியவை அடங்குகின்றன.

ஒவ்வொருவருக்கும், அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் மனதிற்குப் பிடித்தமானவர்களோடு, நேர்மறையானதும், பாதுகாப்பானதுமானதோர் உறவைப் பெற்று மகிழ்வதற்கான உரிமை உள்ளது. மற்ற நாடுகளில் இருப்பதைப் போலவே, இன்னொரு நபரின் பால் வன்முறையில் ஈடுபடுவது சட்ட விரோதமும், மிகக் கடும் குற்றமுமாகும். இதில், வீட்டு வன்முறை அல்லது குடும்ப வன்முறை என்று சொல்லும், வீட்டிற்குள் நடைபெறும் வன்முறை மற்றும் திருமண பந்தத்தில் ஏற்படும் வன்முறையும் அடங்குகிறது. வீட்டு அல்லது குடும்ப வன்முறையில், பயத்தை உண்டாகுவதன் வாயிலாக அல்லது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை உண்டாக்குவதன் வாயிலாக, துணை ஒருவரைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான பழக்கவழக்கம் அல்லது அச்சுறுத்தல்கள் அடங்குகிறது. வீட்டு மற்றும் குடும்ப வன்முறையில், அடித்தல், குடும்ப உறுப்பினர் ஒருவரை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து பிரித்து வைத்தல், அல்லது குழந்தைகள் அல்லது வளர்ப்புப் பிராணிகளை அச்சுறுத்துதல் ஆகியவை அடங்குகின்றன.

வீட்டு அல்லது குடும்ப வன்முறைகளை ஏற்றுக்கொள்வதில்லை அதோடு அவை சட்டத்திற்கு எதிரானவையாகும்.

இத்தகைய குற்றங்களைச் செய்கிற ஒருவர், அவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், சிரைச்சாலைக்குச் செல்ல நேரலாம். எவருமே மோசமாக நடத்தப்பெறுவதை அல்லது தீங்கிழைக்கப்பெறுவதை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவரோ ஆபத்திலிருந்தால், நீங்கள் காவல்துறையினரைத் தொடர்பு கொள்ள வேண்டும். இன்னும் அதிகத் தகவல்கள் www.respect.gov.au மற்றும் www.1800respect.org.au பக்கங்களில் கிடைக்கின்றன.

## போக்குவரத்துக் குற்றங்கள்

சாலை மற்றும் போக்குவரத்து விதிகளை, மாகாண மற்றும் பிரதேச அரசாங்கங்களே கட்டுப்படுத்துகின்றன. போக்குவரத்துச் சட்டங்களை விதிமீறியதற்காக மக்களுக்குத் தண்டனை விதிக்கப்பெறலாம் அல்லது சிறைச்சாலைக்கு அனுப்பப்பெறலாம். அவுஸ்திரேலியாவில் வாகனம் ஒன்றை ஓட்டுவதற்கு, உங்களுக்கு இப்பகுதிக்கான வாகன ஓட்டுனர் உரிமம் அவசியமாகும், அதோடு அந்த வாகனத்தைப் பதிவு செய்திருக்க வேண்டும்.

காரில் பயணம் செய்யும் ஒவ்வொருவரும் சீட் பெல்ட் அணிய வேண்டும். பிள்ளைகளும், சிறு குழந்தைகளும் அங்கீகாரம் பெற்ற கார் இருக்கையில் அமர்ந்திருந்தாக வேண்டும். போக்குவரத்து சட்டங்கள் மிகவும் கண்டிப்பானவையாகும். போதை மருந்துகளை உட்கொண்ட பிறகு அல்லது உங்களது இரத்தத்தில் வரம்பிற்கு மீறி மது இருந்தால், வாகனம் ஒட்டுவது சட்ட விரோதமாகும். வாகனம் ஒட்டும் போது கையில் பிடித்துக் கொள்ளும் மொபைல் கருவியை உபயோகிப்பதும் சட்டத்திற்கு எதிரானதாகும்.



# பகுதி நான்கு

## அவுஸ்திரேலிய மதிப்புகள்



# அவுஸ்திரேலிய மதிப்புகள்

சுதந்திரம், மரியாதை, நியாயம் மற்றும் சம வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையிலான அவுஸ்திரேலிய மதிப்புகள் தான் அவுஸ்திரேலியா தொடர்ந்து பாதுகாப்பான, வளமான, மற்றும் அமைதியான சமுதாயமாக நிலைபெற்றோங்குவதற்கு மையமானதாகும்.

நமது மதிப்புகள் நமது நாட்டை வரையறுத்துச் சொல்லி, வடிவமைக்கின்றன, அதோடு அவை தான் ஏன் நிறைய பேர் அவுஸ்திரேலியர்களாக விரும்புகிறார்கள் என்பதற்கான காரணமுமாகும்.

அவுஸ்திரேலியக் குடியுரிமை என்பது, உங்களது அன்றாட வாழ்விலும், உங்கள் பகுதி சமுதாயத்திலும் இத்தகைய மதிப்புகளை வாழ்ந்து காட்டுவதேயாகும். ஆகவே, நீங்கள், அனைத்து அவுஸ்திரேலியர்களும் மதித்துப் பகிர்ந்து கடைபிடிக்க வேண்டும் என எதிர்பார்க்கிற, இத்தகைய மதிப்புகளைப் புரிந்து கொள்வது மிக முக்கியமானதாகும்.

## நமது மதிப்புகள்

### சட்டத்தின் ஆட்சிக்கு அர்ப்பணித்தல்

எல்லா அவுஸ்திரேலியர்களையும் நமது சட்டங்களையும், சட்ட அமைப்புகளையும் கொண்டு பாதுகாக்கிறோம். அவுஸ்திரேலியர்கள், அமைதியான, ஒழுக்கமான சமுதாயத்தைப் பராமரிப்பதில், சட்டத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துணர்ந்து கொள்கிறார்கள்.

சட்டத்தின் ஆட்சியின் கீழ், அனைத்து அவுஸ்திரேலியர்களும் சட்டத்தைப் பொருத்த வரையில் சமமே, எவருமே, எந்தக் குழுவுமே சட்டத்திற்கு மேலானவர் அல்ல. அவுஸ்திரேலியாவில், ஒவ்வொருவரும் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும், அதை எந்த நேரத்திலும் மீறக்கூடாது, மீறினால் உங்களுக்கு அபராதம் விதிக்கப்பெறலாம். யாருமே உங்களைக் கவனிக்கவில்லை என்றாலும் கூட நீங்கள் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும்.

அவுஸ்திரேலிய சட்டம், அவுஸ்திரேலியாவில் இருக்கிற எல்லாருக்கும் பொருந்தும். இதன் பொருள், உங்களது பின்னணியம் அல்லது கலாச்சாரத்தைப் பொருட்படுத்தாமல், நீங்கள் அவுஸ்திரேலிய சட்டத்தைப் பின்பற்றியாக வேண்டும்.

### பாராளுமன்ற ஜனநாயகம்

அவுஸ்திரேலியாவின் அரசாங்க அமைப்பு, ஒரு பாராளுமன்ற ஜனநாயகமாகும். நமது சட்டங்களை மக்கள் தேர்ந்தெடுத்த பாராளுமன்றங்களே தீர்மானிக்கின்றன. இதன் பொருள், நாட்டை எவ்விதம் ஆளுகிறார்கள் என்பதில் அவுஸ்திரேலிய மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதேயாகும். அரசாங்க அதிகாரம் அவுஸ்திரேலிய மக்களிடமிருந்தே வருகிறது, ஏனென்றால் அவுஸ்திரேலியக் குடிமக்கள், பாராளுமன்றத்தில் அவர்களது பிரதிநிதியாகச் செயல்படுவதற்காக மக்களுக்கு வாக்களிக்கிறார்கள்.

வாக்களிப்பது என்பது அவுஸ்திரேலியாவில் கட்டாயமானதாகும். இது, தேர்தல்களில் பங்கேற்பதன் முக்கியத்துவத்தைக் காண்பிக்கிறது.

## பேச்சு சுதந்திரம்

அவுஸ்திரேலியாவில் மக்கள் தங்களது சிந்தனைகளை, அவை சட்டத்திற்கு உட்பட்டிருக்கும் வரைக்கும், சுதந்திரமாக வெளிப்படுத்த இயல வேண்டும். அவுஸ்திரேலியாவில், மக்கள், சமுதாய அல்லது அரசியல் விவாதங்களுக்காகப் பொது அல்லது தனியார் இடங்களில் கூடுவதற்குச் சுதந்திரமுள்ளவர்களாவர். மக்களுக்கு, எந்தத் தலைப்பு குறித்தும் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைச் சொல்லவும், எழுதவும், அதே போல தங்களது சிந்தனைகளை மற்றவர்களோடு விவாதிக்கவும் சுதந்திரமுண்டு. செய்தித்தாட்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி மையங்களுக்கும் அதேயளவு சுதந்திரம் உண்டு.

அவுஸ்திரேலியர்களுக்கு, அரசாங்க நடவடிக்கைகளுக்கு எதிராகப் அமைதியான போராட்டம் நடத்த அனுமதியுண்டு, ஏனென்றால் அமைதியான முறையில் பொதுமக்கள் போராட்டம் நடத்துவதைச் சகித்துக் கொள்வது ஜனநாயகத்தின் ஒரு அத்தியாவசியமான பகுதியாகும்.

இன்னொரு நபர் அல்லது மக்கள் குழுவிற்கு எதிராக (அவர்களின் கலாச்சாரம், பூர்வீகம், மதம் அல்லது பின்னணியம் காரணமாக போன்று) வன்முறையைத் தூண்டுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல, ஏனென்றால் அது அவுஸ்திரேலிய மதிப்புகள் மற்றும் சட்டத்திற்கு எதிரானதாகும். போலியான குற்றச்சாட்டுக்களைக் கூறுவது அல்லது மற்றவர்களை சட்டத்தை மீற ஊக்குவிப்பதும் சட்ட விரோதமானதாகும். மற்றவர்களின் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரங்கள் சட்டப்பூர்வமாக இருக்கும் வரையில், அவற்றை மதித்தாக வேண்டும்.

## சங்க சுதந்திரம்

அவுஸ்திரேலியாவில், சட்டத்திற்கு உட்பட்டிருக்கும் வரையில், மக்கள் எந்தக் குழுவில் சேரவும், அல்லது அதிலிருந்து வெளியேறவும் சுதந்திரமுள்ளவர்கள். மக்கள், அரசியல் கட்சி, தொழிலாளர் சங்கம், மத, கலாச்சார அல்லது சமுதாயக் குழுக்கள் போன்ற, எந்த சட்டப்பூர்வமான ஸ்தாபனத்திலும் சேர்ந்து கொள்வதற்கு சுதந்திரமானவர்களாவர். தனிநபர்களை ஒரு அமைப்பில் சேரக் கட்டாயப்படுத்த முடியாது அல்லது அதிலிருந்து விலகவும் வற்புறுத்த முடியாது.

அவுஸ்திரேலியர்கள், அரசாங்க நடவடிக்கை அல்லது ஒரு ஸ்தாபனத்திற்கு எதிராக போராட்டம் நடத்துவதற்காக உட்பட மற்றவர்களுடன் சுதந்திரமாக சேர்ந்து கூடலாம். இருந்தாலும், எல்லாப் போராட்டங்களும் சட்டத்திற்குட்பட்டே இருந்தாக வேண்டும். இதன் பொருள், அது போன்ற கூட்டங்கள் அமைதியானவையாக இருந்தாக வேண்டும், அதோடு அவை எவரையும் காயப்படுத்தக்கூடாது அல்லது சொத்தைச் சேதப்படுத்தக்கூடாது.

## மதச் சுதந்திரம்

அவுஸ்திரேலியாவிற்கென்று அதிகாரப்பூர்வ மதம் கிடையாது அதோடு அவுஸ்திரேலியாவில் இருக்கிறவர்கள், அவர்களுக்குப் பிடிக்கிற எந்த மதத்தையும் பின்பற்றிக்கொள்ளச் சுதந்திரமானவர்கள். அரசாங்கம், மதம் அல்லது நம்பிக்கைகள் எதுவாக இருந்தாலும், அனைத்துக் குடிமக்களையும் சமமாகவே நடத்துகிறது. இருந்தாலும், மதப் பழக்கவழக்கங்கள், அவுஸ்திரேலிய சட்டங்களை மீறக்கூடாது.

அவுஸ்திரேலியாவிற்கு, மதச் சட்டங்களுக்கு எவ்வித சட்டப்பூர்வ அந்தஸ்தும் கிடையாது. அவுஸ்திரேலியாவில் இருக்கும் ஒவ்வொருவரும், அது மதச் சட்டங்களில் இருந்து வித்தியாசமானதாக இருக்கும் இடங்களிலும் கூட, அவுஸ்திரேலிய சட்டத்தைப் பின்பற்றியாக வேண்டும். பலதார மணம் (ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை திருமணம் செய்வது) மற்றும் கட்டாயத் திருமணம் போன்ற சில மத அல்லது கலாச்சாரப் பழக்கவழக்கங்கள், அவுஸ்திரேலியாவில் சட்டத்திற்கு எதிரானவையாகும், அதோடு அவை சிறைதண்டனை உட்பட, கடுமையான சட்டப்பூர்வத் தண்டனைகள் கிடைக்கப்பெறுவதிப் போய் முடிந்து விடலாம். மதச் சகிப்புத்தன்மையின்மையை அவுஸ்திரேலிய சமுதாயத்தில் ஏற்றுக்கொள்வதில்லை.

அவுஸ்திரேலிய சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வரைக்கும், அனைவருக்கும், அவர்களது பூர்வீகம் அல்லது மதத்தைப் பொருட்படுத்தாமல், அவர்களது இலக்குகளையும், ஆர்வங்களையும் தொடர்ந்து பிடிப்பதற்கான சம சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.



## சட்டத்தின் கீழ் எல்லாரும் சமம்

அவுஸ்திரேலிய சமுதாயம், பாலினம், பால் சார்பு, வயது, ஊனம், மதம், இனம், அல்லது தேசியம் அல்லது பூர்வீக மூலம் இவற்றைப் பொருட்படுத்தாமல், அனைவரக்கும் சம உரிமை என்பதை மதிக்கிறது.

ஒருவரை மற்றவர்களை விட வித்தியாசமாக நடத்துவதிலிருந்து பாதுகாப்பதற்கு அவுஸ்திரேலியாவில் அனேக சட்டங்கள் இருக்கின்றன. வெவ்வேறு பின்னயத்தில் இருந்து வருகிறவர்களை முன்னுரிமை கொடுத்து நடத்தவில்லை, அல்லது பாகுபாடு காண்பிக்கவில்லை எனும் வகையில் அவுஸ்திரேலியாவில் சட்டத்தை அமல்படுத்துகிறோம்.

உதாரணமாக, கிறிஸ்தவர்களை எவ்விதம் நடத்துகிறோமோ அதே விதத்தில் தான் புத்த மதத்தவர்களையும், மற்ற நம்பிக்கையுள்ள அனைவரையும் நடத்துகிறோம். சட்டத்தின் கீழ், இருவர், பாலினத்தைப் பொருட்படுத்தாமல், இரண்டு ஆண்களுக்கு அல்லது இரண்டு பெண்களுக்கு இடையேயான திருமணம் உட்பட, திருமணம் செய்து கொள்ளலாம்.

அவுஸ்திரேலியாவில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமை உள்ளது, அவர்களது இலக்குகளையும், ஆர்வங்களையும் தொடர்ந்து பிடிப்பதற்கான சம சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். ஆண்களும், பெண்களுமாகிய இருவருமே கல்வி மற்றும் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு சம வாய்ப்பு உள்ளது, தேர்தல்களில் வாக்களிக்கலாம், பாராளுமன்றத்திற்கு நிற்கலாம், அவுஸ்திரேலியப் பாதுகாப்புப் படை மற்றும் காவல்துறையில் சேர்ந்து கொள்ளலாம், அதோடு அவர்களை நீதிமன்றங்களில் சமத்துவமாகவே நடத்துகிறோம்.

ஒருவரது பாலினத்தின் காரணமாக பாகுபாடு காட்டுவது சட்டத்திற்கு விரோதமானதாகும். அவுஸ்திரேலியாவில், ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணைவிட அதிகப் படிப்பும், திறமைகளும் இருக்கிற பட்சத்தில், ஒரு ஆணுக்கு முன்னதாகவே வேலையைப் பெற்றுக் கொள்வது ஒரு பெண்ணின் உரிமையாகும்.

திருமணம் மற்றும் மதம் போன்ற, தனிப்பட்ட விடயங்கள் குறித்து, தங்களது சொந்தத் தனிப்பட்ட விருப்பங்களை தெரிவு செய்வதற்கான உரிமை ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் உண்டு, அதோடு அவர்கள் தூண்டுதல் அல்லது வன்முறையிலிருந்து பாதுகாக்கப்பெறுகிறார்கள். இல்வாழ்க்கைத் துணை அல்லது கூட்டாளி ஒருவருக்கு எதிராக, உடல் ரீதியாக வன்முறையில் ஈடுபடுவதை, அவுஸ்திரேலியாவில் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை அதோடு அது ஒரு குற்றவியல் செயலாகும்.

அவுஸ்திரேலியாவில் விவாகரத்தை ஏற்றுக்கொள்கிறோம். கணவரோ அல்லது மனைவியோ, மற்ற இல்வாழ்க்கைத் துணை திருமணத்தைத் தொடர் விரும்பினாலும் கூட, நீதிமன்றத்தில் விவாக இரத்திற்காக விண்ணபிக்கலாம்.

## சந்தர்ப்ப சமத்துவம் மற்றும் நியாயமாக நடத்துதல்

நியாயமாக நடத்தப்பெறுவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்றும், அவர்களை எந்த வகையிலான வகுப்பு பிரிவினையினாலும் கட்டுப்படுத்தக்கூடாது என்றுமே நாங்கள் நம்புகிறோம். ஒவ்வொருவருக்கும், அவர்களது பின்னணியத்தைப் பொருட்படுத்தாமல், வாழ்க்கையில் வெற்றியடைவதற்கானதோர் சம அளவு சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறோம், அதோடு, ஒவ்வொருவருக்கும் சம அளவிலான சட்ட உரிமைகள் உள்ளன என்பதைப் பார்த்துக் கொள்வதும், அவுஸ்திரேலிய சமுதாயத்தில் இருக்கும் நியாயத்தின் ஒரு முக்கியமான கோணமாகும்.

ஒருவர் வாழ்க்கையில் சாதிப்பது என்பது அவர்களது கடின உழைப்பு மற்றும் திறமைகளின் பலனாகவே இருக்க வேண்டும். இதற்கு, ஒருவர் திறமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் வேலை பெற வேண்டுமேயொழிய, அவர்களது பாலினம், சொத்து அல்லது பூர்வீகம் காரணமாகப் பெறக்கூடாது.

ஒரு ஸ்தாபனம் ஒரு வேலை காலியிடத்தை நிரப்ப வேண்டியிருந்தால், அந்த வேலைக்கான மிகச்சிறந்த திறமைகள் மற்றும் அனுபவமுள்ள ஒருவரைத் தெரிவு செய்துள்ள சட்டம் துணைபுரிகிறது.

அவுஸ்திரேலியாவில், அனேகப் புதிய குடிவரவாளர்கள் வியாபாரத்தில், தங்கள் தொழிலில், கலையில், பொதுச் சேவையில் மற்றும் விளையாட்டில், அவர்களது கடின உழைப்பு மற்றும் தொழில்முயற்சி காரணமாகத் தலைவர்களாக ஆகியிருக்கிறார்கள்.

## மற்றவர்களுக்கான பரஸ்பர



## மரியாதை மற்றும் சகிப்புத்தன்மை

அவுஸ்திரேலியாவில், தனிநபர்கள், மற்றவர்களது சுதந்திரம் மற்றும் கண்ணியத்தையும், அவர்களது கருத்துக்களையும், விருப்பங்களையும் மதித்தாக வேண்டும்.

இன்னொருவரின் பால் வன்முறையாக நடந்து கொள்வது சட்டத்திற்கு எதிரானதாகும். வார்த்தை மூலமாக, உடல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட, எவ்வகையிலான வன்முறையும் சட்டவிரோதமானதே. அவுஸ்திரேலியவர்கள் சமாதானமாக முரண்படுவதிலும், எல்லா உரிமைகளுக்கும் மேலாக, வன்முறையில்லாமலும், அச்சமின்றியும், பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் இருப்பதிலேயே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

அவுஸ்திரேலியாவில், பாலுறவிற்கு சம்மதம் தெரிவிக்கும் வயது சம்பந்தமாக மிகக் கண்டிப்பான சட்டங்கள் உள்ளன, அது நீங்கள் எந்த மாகாணத்தில் வசிக்கிறீர்கள் என்பதைப் பொருத்து 16 அல்லது 17 ஆகும். உதாரணமாக, அவுஸ்திரேலியாவில், 20 வயதுடைய ஒருவன் 15 வயதுடைய பெண்ணோடு பாலுறவு கொள்ள முடியாது, ஏனென்றால் அது அனைத்து அவுஸ்திரேலிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களிலும் சட்டத்திற்கு எதிரானதாகும்.

அவுஸ்திரேலியாவில், காவல்துறையினரின் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும். காவல்துறையினரின் சட்டப்பூர்வமான வேண்டுகோளுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும், ஏனென்றால் அனைத்து அவுஸ்திரேலியர்களும் சட்டத்தைப் பின்பற்ற அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள்.

பரஸ்பர மரியாதை மற்றும் சகிப்புத்தன்மை என்ற கோட்பாடுகளை அவுஸ்திரேலியா மதிக்கிறது இதன் பொருள், மற்றவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்பதும், அவர்களது கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும், அவர்களது வித்தியாசமானதாக இருந்தாலும் கூட, அவற்றை மதிப்பதுமேயாகும். மக்கள், மற்றவர் கூற்றை ஒப்புக்கொள்ளாத போதும், ஒருவரை ஒருவர் சகித்துக்கொள்பவர்களாக இருக்க வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் இனப்பாகுபாட்டிற்கு இடமேயில்லை. இதில், இணையத்தில், அல்லது மற்ற பிரசுரங்களில் இன ரீதியாக கோபமூட்டும் விஷயங்களை உருவாக்குதல் அல்லது பகிர்தல் மற்றும் ஒரு பொது இடத்தில் அல்லது ஒரு விளையாட்டு நிகழ்ச்சியில் இன ரீதியாக மோசமான கருத்துக்களை வெளியிடுவது அடங்குகிறது.

# நமது சமுதாயம்

## பங்களிப்பைச் செய்வது

குடியுரிமையானது, உங்களுக்குத் தேசித்தின் வாழ்விலும், சமுதாயத்தில் முழுமையாகப் பங்கேற்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. ஒரு அவுஸ்திரேலிய குடிமகன் என்ற முறையில் உங்களது பொறுப்புக்களை நிறைவேற்ற நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்கள் என்பதையே இது குறிக்கிறது. அவுஸ்திரேலியாவில் வசிக்கிற ஒவ்வொருவரும் சமுதாயத்தில் பங்குகொண்டு, நமது சமுதாயத்திற்குப் பங்களிக்க வேண்டும் என்றே அவுஸ்திரேலியர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஒவ்வொருவருக்கும், தங்களால் முடியும் போது தங்களையும், தங்கள் குடும்பங்களையும் பார்த்துக்கொண்டு, காப்பாற்றுவதற்கான பொறுப்பு இருக்கிறது.

## தேவையில் இருப்பவர்களுக்கான கரிசனை

அவுஸ்திரேலியர்கள் 'தோழமையை' மதிக்கிறார்கள். தேவையான நேரங்களில் நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்கிறோம். உதாரணமாக, இது, அயலகத்தில் இருக்கும் வயதான ஒருவ்வருக்கு உணவு கொண்டு போய்க் கொடுப்பது, மருத்துவர் ஒருவரைப் பார்ப்பதற்காக நண்பரைக் காரில் அழைத்துச் செல்வது, அல்லது சுகவீனமாக, நடக்க முடியாமல் அல்லது தனிமையில் வாடும் ஒருவரைப் போய்ப் பார்ப்பதாகக்கூட இருக்கலாம்.

தோழமை என்ற உணர்வில், அவுஸ்திரேலியாவிற்கு சமூக சேவை மற்றும் தன்னார்வத் தொண்டு புரிவதில் – ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, சமுதாயத்தை வலுப்படுத்துவதில் - வலுவான பாரம்பரியம் இருக்கிறது. தன்னார்வத் தொண்டுபுரிவதென்பது, அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும், புதிய திறமைகளைக் கற்றுக்கொள்வதற்கும், அவுஸ்திரேலிய சமுதாயத்திற்குள் நீங்கள் ஒருங்கிணைத்திருப்பதையும், அதைச் சேர்ந்தவர் என்ற உணர்வையும் அதிகப்படுத்துவதற்கும் இது ஒரு அற்புதமான சந்தர்ப்பமாகும். அவுஸ்திரேலியாவில் தன்னார்வத்தொண்டு புரிவதற்கு அனேக சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

## தேசிய மொழியாக ஆங்கிலம்

அவுஸ்திரேலிய சமுதாயம், ஆங்கில மொழியையே அவுஸ்திரேலியாவின் தேசிய மொழியாகவும், சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் ஆக்கக்கூறாகவும் மதிக்கிறது. அவுஸ்திரேலியாவில் வசிப்பவர்கள், ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

ஆங்கிலத்தைப் பேசக் கற்றுக்கொள்வது முக்கியமானதாகும், அது கல்வி, வேலை, மற்றும் சமுதாயத்திற்குள் நன்கு ஒருங்கிணைவதற்கு உதவுகிறது. பொருளாதாரத்தில் பங்கேற்பதும், சமுதாய ஒருங்கிணைப்பில் இருப்பதும் அத்தியாவசியமாகும். அவுஸ்திரேலிய குடியுரிமைக்கு விண்ணப்பிப்பவர்கள், ஆங்கிலம் அவர்களது தாய்மொழியாக இல்லாத பட்சத்தில், அதைக் கற்றுக்கொள்வதற்கு நியாயமான அளவிற்கு முயற்சியை முன்னெடுத்தாக வேண்டும்.

## நமது சமுதாயத்தைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள உதவுதல்

அவுஸ்திரேலியாவில், அவுஸ்திரேலிய சமுதாயத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கான பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. உதாரணமாக, அவுஸ்திரேலியாவில் இருக்கிறவர்கள், தங்களது நண்பர் அல்லது அயலகத்தார் கடும் குற்றச்செயல் ஒன்றைத் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறாரோ எனச் சந்தேகிக்கிற பட்சத்தில், அவர்கள் இதை கூடிய விரைவில் அவுஸ்திரேலிய அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவித்திட வேண்டும். இவ்விதத்தில், நாம் நமது சமுதாயத்தின் பாதுகாப்பைப் பேணிக்காத்திட உதவ முடியும்.

இதைப்போலவே, அவுஸ்திரேலியாவில் இருக்கிற ஒருவர், ஒரு குழந்தையைத் துஷ்பிரயோகம் செய்வதைப் பார்க்கையில் அல்லது அது குறித்துத் தெரியவருகையில், அவர்கள் இதை விசாரணை செய்வதற்காக காவல்துறையினரிடம் அறிவித்திட வேண்டும்.

அவுஸ்திரேலியாவில், இணைய வாயிலாக துஷ்பிரயோகம் செய்வதை ஏற்றுக்கொள்வதில்லை. இதை சில நேரங்களில் இணைய துஷ்பிரயோகம் என்கிறோம். இதற்கான உதாரணங்களில், ஒப்புதல் இல்லாமல் பாலியல் ரீதியிலான புகைப்படங்களை அல்லது வீடியோக்களைப் பகிர்தல், ஒருவரை இணையத்திலேயே பின்தொடர்தல், அல்லது ஒருவரைக் குறித்து இணையத்தில் இன ரீதியாக துஷ்பிரயோகமான கருத்துக்களை வெளியிடுதல் ஆகியவை அடங்குகின்றன. அவுஸ்திரேலியாவில், அனேக வடிவிலான இணைய துஷ்பிரயோகங்கள் சட்டவிரோதமானவையாகும்.

## அவுஸ்திரேலியாவிற்கு விசுவாசமாக நடத்தல்

குடியுரிமை உறுதிமொழியில், அவுஸ்திரேலியாவிற்கும், அதன் மக்களுக்கும் விசுவாசமாக நடந்து கொள்ள அவுஸ்திரேலியக் குடிமக்கள் உறுதியளிக்கிறார்கள். அவுஸ்திரேலியர்கள், இன்னொரு நாட்டின் அல்லது நாடுகளின் குடியுரிமையையும் வைத்துக்கொள்ளலாம், அந்நாடுகளின் சட்டங்கள் அனுமதித்தால். இதைத் தான் இரட்டை, அல்லது பன் குடியுரிமை என்கிறோம். இருந்தாலும், ஒருவர் இன்னொரு நாட்டின் குடிமகனாக இருந்தாலும் கூட, ஒரு அவுஸ்திரேலியக் குடிமகன், அவுஸ்திரேலியாவிற்குள், எல்லா நேரங்களிலும் அனைத்து அவுஸ்திரேலிய சட்டங்களையும் பின்பற்றியாக வேண்டும். சில அவுஸ்திரேலிய சட்டங்களை, அவுஸ்திரேலிய குடிமக்கள் வெளிநாடுகளில் இருந்தாலும் கூடப் பின்பற்றியாக வேண்டும். உதாரணமாக, அவுஸ்திரேலியர்கள், இங்கோ அல்லது வெளிநாட்டிலோ, 16 வயதிற்குக் கீழான ஒரு குழந்தையோடு, பாலுறாவில் ஈடுபடுவது சட்டவிரோதமானதாகும்.

அவுஸ்திரேலிய சமுதாயமானது, அவுஸ்திரேலியாவின் நலன்களையும், பாதுகாப்பையும் குறைத்து மதிப்பிடக்கூடாது என்கிற, நமது பகிர்ந்து கொண்ட கடமைகளின் அடிப்படையிலானது. உதாரணமாக, அதிகாரப்பூர்வ அரசாங்க இரகசியங்களைப் பகிர்ந்திட சமூக ஊடகத்தை உபயோகிப்பது, அவுஸ்திரேலிய நலன்களைக் குறைத்து மதிப்பிடுவதாகும். அதைப்போலவே, ஒரு பூர்வீக சமுதாயத்தில் அவநம்பிக்கையை அல்லது பயத்தை அதிகரிப்பது, அவுஸ்திரேலிய சமுதாய உறவுகளைச் சேதப்படுத்திவிடும்.

அவுஸ்திரேலியாவில், இக்கட்டுக் காலங்களில் நாம் ஒன்றுகூடி, நல்ல காலங்களிலும், கெட்ட காலங்களிலும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கிறோம். உயிரிழப்பையும், சொத்து சேதத்தையும், வன உயிர்களின் இழப்பையும் ஏற்படுத்தி, சுற்றுச்சூழல் பேரழிவை உண்டாக்கிய, அவுஸ்திரேலியவின் 2019-20 ஆம் ஆண்டின், மிகக் கடுமையான புதர்க்காடுகள் தீவிபத்துக் காலத்தின் போது, அனேகப் பன்கலாச்சார சமுதாயங்கள், பணம், உடைகள் மற்றும் உணவு அன்பளிப்புகளை வசூல் செய்யவும், புதர்க்காட்டுத் தீவிபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்துதவவும் கூடி உழைத்தார்கள். உதாரணமாக, விக்டோரியாவில் இருக்கிற சீன, வியாட்னாமிய, கம்போடிய சமுதாயங்களில் இருந்து வந்தவர்கள், வணிக மையங்களில் நன்கொடைகளை வசூல் செய்து, உள்ளூர் சமுதாயக் குழு நிகழ்ச்சிகள் வாயிலாக நிதி திரட்டித் தந்தார்கள், அதோடு, சீக்கிய சமுதாயத்தினர் குயின்ஸ்லாந்தில் இருந்த சமுதாயங்கலுக்கும், தீயணைப்பு வீரர்களுக்கும், ஆயிரக்கணக்கான தண்ணீர் புட்டிகளை தானமாக வழங்கினார்கள்.



# முடிவில்

அமைதியும், ஸ்திரமும் கொண்டதொரு சமுதாயத்தை நமது ஜனநாயக அமைப்புமுறைகள் உருவாக்கியுள்ளன.

பகிர்ந்துகொள்வதற்கென நம்மிடம் தனித்துவம் வாய்ந்த, செழிப்பான கலாசாரம் ஒன்றுண்டு. ஓர் அவுஸ்திரேலியப் பிரசை எனும் முறையில், நமது தேசத்தின் கதையில் நீங்கள் ஒரு அங்கமாகி, நமது எதிர்காலத்திற்குப் பங்களிப்பாற்றுவீர்கள். அவுஸ்திரேலியா உங்களை வரவேற்கிறது. குடியுரிமை எமது பொதுப் பிணைப்பாகும்.

பிரசாஉரிமைப் பரீட்சைக்கு ஆயத்தமாகும் வகையில், 44-46-ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ள பயிற்சிப் பரீட்சை வினாக்களைச் செய்யுங்கள்.

# ’பரீட்சிக்கப்படக் கூடுமான பகுதி’க்கான சொல் அட்டவணை

பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்கள்
பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்கள் தான் அவுஸ்திரேலியாவில் இருக்கும் மண்ணின் முதல் குடிகளாவர்
*அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்கள் மக்கட்தொகையில் கிட்டத்தட்ட மூன்று சதவீதமளவிற்குக் இருக்கிறார்கள்*

அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம்
இது, பாகுபாடு காண்பித்தல் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த புகார்களை விசாரணை செய்கிறதோர் சுதந்திரமான ஆணையமாகும்.
*இனவெறி குறித்த நிகழ்வுகளை அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்திடம் புகார் செய்யலாம்.*

அவுஸ்திரேலிய அரசாங்க சேவை
அரசாங்கத் திணைக்களங்களும் அவற்றால் வேலைக்கு அமர்த்தப்படுவோரும்
*அவுஸ்திரேலிய அரசின் பொதுச் சேவையில் செர்வீசஸ் அவுஸ்திரேலியா பணியாளராகபோலுக்கு வேலை கிடைத்துள்ளது.*

உள்நாட்டுக் கலவரம்
பொதுவாக அரசாங்கத்தின் முடிவுகள் அல்லது கொள்கைகள் ஆகியவற்றை எதிர்த்து பெரும் மக்கள் திரள்களால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கலவரங்கள்
*மக்கள் விரும்பாத சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியபோது உள்நாட்டுக் கலவரம் ஏற்பட்டது.*

கூட்டணி
பொதுவாக அரசாங்கத்தை அல்லது எதிர்க்கட்சியை அமைப்பதற்கென இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் ஒன்றாய்ச் சேர்வது
*தேர்தலுக்குப் பிறகு, பிரதிநிதிகள் சபையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மைப் பலம் கிடைக்கவில்லை, எனவே ஒருமித்த கருத்துக்களையுடைய இரு கட்சிகள் கூட்டணி அமைப்பதற்காக ஒன்று சேர்ந்தன.*

ஆணையம்
அதிகாரப்பூர்வமான பொறுப்பைக் கொண்டோரது குழு
*சுதந்திரமாய்த் தனித்தியங்கும் ஆணையம் ஒன்று தேர்தல்களை ஏற்பாடு செய்கிறது.*

அரசியலமைப்பு
அரசாங்கம் இணங்கி நடந்தாக வேண்டிய அவுஸ்திரேலியாவின் உச்சநிலை சட்டம்
*அரசியலமைப்பு தான், சட்ட, நிர்வாக மற்றும் நீதிமன்ற அதிகாரங்களை அமைத்துக்கொடுக்கிறது.*

அரசியல் சட்டப்படியான முடியரசு
அரசியல் சாசனத்தினால் அதிகாரம் கட்டுப்படுத்தப்படும் அரசர் அல்லது அரசியாரை நாட்டின் தலைமை அதிகாரியாகக் கொண்ட நாடு
*ஐக்கிய இராச்சியத்தின் அரசர் அல்லது அரசியாரைத் தேசத் தலைவராகக் கொண்ட அரசியல் சாசன முடியரசாக அவுஸ்திரேலிய பொதுநல அரசினை நமது அரசியல் சாசனம் ஸ்தாபிதம் செய்தது.*

நீதிமன்றம்
நீதிபதி அல்லது குற்றவியல் நடுவர் ஒருவரால் சட்ட சம்பந்தப்பட்ட வழக்குகள் கேட்கப்படும் இடம்
*சட்டத்தை மக்கள் மீறும்போது, அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல நேரிடலாம்.*

குற்ற விசாரணை
ஒருவர் குற்றவாளியா அல்லது நிரபராதியா என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு சுமத்தப்பட்ட குற்றம் குறித்த உண்மைகளை நீதிமன்றத்தில் கேட்டல்
*குற்றவழக்கு விசாரணைக்குப் பிறகு, வங்கித் திருடன் சிறைக்கு அனுப்பப்பட்டான்.*

இணைய துஷ்பிரயோகம்
ஒருவரை, அவர்களுக்குத் தீங்கிழைக்க வேண்டும் என்ற நோக்கில், அச்சுறுத்த, மிரட்ட, துன்புறுத்த அல்லது அவமானப்படுத்த தொழில்நுட்பத்தை உபயோகிக்கிற பழக்கவழக்கம்.
*அவுஸ்திரேலியாவில் அனேக விதமான இணைய துஷ்பிரயோகங்கள் சட்ட விரோதமானவையாகும், அதோடு அவற்றை காவல்துறையினரிடமும், அது நடைபெற்ற சமூக ஊடக மேடை போன்ற இணைய சேவையிடத்திலும் புகார் தெரிவிக்க வேண்டும்.*

ஜனநாயகம்
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் மக்களால் நடத்தப்படும் அரசு
*தான் விரும்பும் ஒருவரைப் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்க தான் வாக்களிக்க வகை செய்யும் ஜனநாயக*

*நாட்டில் வசிப்பது குறித்து கிரேஸ் மகிழ்ச்சியடைகிறாள்.*

வீட்டு அல்லது குடும்ப வன்முறை

இது, பயத்தை உண்டாகுவதன் வாயிலாக அல்லது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை உண்டாக்குவதன் வாயிலாக, துணை ஒருவரைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான பழக்கவழக்கம் அல்லது அச்சுறுத்தல்களாகும்.
*வீட்டு அல்லது குடும்ப வன்முறைகளை ஏற்றுக்கொள்வதில்லை அதோடு அவை சட்டத்திற்கு எதிரானவையாகும்.*

*வீட்டு அல்லது குடும்ப வன்முறைகள் சட்டத்திற்கு எதிரானவையாகும், அதோடு அவற்றைக் காவல்துறையினரிடம் புகார் தெரிவிக்க வேண்டும்.*

போதைவஸ்து கடத்தல்

சட்டவிரோத விற்பனைக்கென போதைவஸ்துக்களை எடுத்துச் செல்லுதல் அல்லது வாங்குதல்
*போதைவஸ்து கடத்தலுக்காக ஜெஸ் சிறைக்கு அனுப்பப்பட்டாள்.*

தேர்தல்

பாராளுமன்றத்தில் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்த மக்கள் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சி
*18 வயதான அல்லது அதற்கு மேற்பட்ட அவுஸ்திரேலியப் பிரசைகள் தேர்தலில் கட்டாயம் வாக்களிக்கவேண்டும்.*

வாக்காளர் பட்டியல்

தேர்தல் அல்லது கருத்துக்கணிப்பு ஒன்றில் வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளவர்களது அட்டவணை
*வாக்குச்சாவடிக்கு ஜேன் வந்தபோது, அவள் பெயரை வாக்காளர் பட்டியலில் அதிகாரி தேடினார்.*

தேர்தல் தொகுதி

பிரிதிநிதிகள் சபையில் அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக வாக்களிக்கும் வாக்காளர்களாலான மாவட்டங்கள்
*தேர்தல் தொகுதிகளை தேர்தல் மாவட்டங்கள், பிரிவுகள், அல்லது இடங்கள் என்று சொல்கிறார்கள்.*

சமத்துவம்

அந்தஸ்தில் ஒரே விதம்
*அவுஸ்திரேலியர்கள் எல்லாரும் சமம் என்பதில் நம்பிக்கை கொள்கிறார்கள்.*

சட்டத்தை நடைமுறைப்படுத்தல்

மக்கள் சட்டத்தைப் பின்பற்றுவதை உறுதிசெய்தல்
*போலிஸ்காரர்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அமைதியைக் காக்கின்றனர்.*

சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரம்

சட்டத்தை நிறைவேற்றுவதற்கான அதிகாரம், அவுஸ்திரேலிய அரசியல் சாசனத்தின் கீழ் அளிக்கப்படும் முவ்வகை அதிகாரங்களில் ஒன்று
*அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நிறைவேற்று அதிகாரம் அவுஸ்திரேலிய அரசாங்க மந்திரிகளுக்கும், கவர்னர்-ஜெனரலுக்கும் உண்டு.*

நியாயமாக நடத்தப்பெறுதல்

ஒவ்வொருவருக்கும், அவர்களது பின்னணியத்தைப் பொருட்படுத்தாமல், வாழ்க்கையில் வெற்றியடைவதற்கானதோர் சம அளவு சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறோம்.
*அவுஸ்திரேலியாவில், ஒவ்வொருக்கும், 'நியாயமாக நடத்தப்பெறுதற்கான' உரிமையுண்டு என்றே நாம் நம்புகிறோம்.*

கூட்டரசு

தம் கையில் குறிப்பிட்ட சில அதிகாரங்களை வைத்துக்கொண்டு, குடியேற்றங்கள் அனைத்தும் ஒரே தேசமாக ஒன்றுபடுவது
*1901-ஆம் ஆண்டு குடியேற்றங்கள் ஒன்றிணைந்து அவுஸ்திரேலியப் பொதுநல அரசு எனும் கூட்டரசாக மாறியது.*

முதலாம் கப்பல் தொகுதி

நியூ ஸவுத் வேல்ஸ்-இல் தண்டனைக் கைதிகளது குடியேற்றம் ஒன்றை அமைப்பதற்காக கேப்டன் ஆர்தர் ஃபிலிப் தலைமையில் பிரட்டனிலிருந்து புறப்பட்ட 11 கப்பல்களின் தொகுதி
*1788-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் தேதி ஸிட்னி வளைகுடாவில் 'முதலாம் கப்பல்தொகுதி' வந்து இறங்கியதை 'அவுஸ்திரேலிய தின'த்தன்று நாம் நினைவு கூர்கிறோம்.*

மலர்ச் சின்னம்

தேசிய மலர்
*தங்க வாட்டில் எனும் மலர் அவுஸ்திலேரயாவின் தேசிய மலராகும்.*

கட்டாயத் திருமணம்

இது, திருமணத்தில் இணையும் ஒருவர் அல்லது இருவருக்குமே மனம் ஒப்பவில்லை
*அவளுக்கு அவளது கட்டாயத் திருமணத்தில் ஒருபோதும் நிம்மதியில்லை, ஆகவே அவள் அதிலிருந்து வெளியேற விரும்பினாள்.*

இந்த நேரத்தில் இருந்து இனிமேல்

இப்போதிருந்து எதிர்காலத்தில்
*குடியுரிமைச் சடங்கில், நீங்கள் இந்த நேரத்தில் இருந்து இனிமேல் அவுஸ்திரேலியாவிற்கு விசுவாசமாக நடந்து கொள்ள*

*வாக்குறுதியளிக்கிறீர்கள்.*

சின்னம்
மிகச் பிரபலமான ஒரு உருவம்
*'ஓபரா ஹவுஸ்' ஸிட்னி நகரின் புகழ்பெற்ற அடையாளச் சின்னமாகும்.*

பூர்வீகவாசிகள்
அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்கள்
*அவுஸ்திரேலிய நாட்டு மண்ணில் ஆரம்பம் தொட்டு வசிக்கும் பூர்வீகக் குடிகளாவர்.*

ஒருங்கிணைப்பு
குடிவரவாளர்கள், தங்களது புதிய, உருவாகிவரும் சமுதாயத்தில் பங்கேற்று, அதற்குப் பங்களிக்க முடிகிற வகையில், அவர்கள் ஏற்றுக்கொள்ளும் ஒரு நடைமுறை
*காலப்போக்கில், குடிவரவாளர்கள் அவுஸ்திரேலியாவிற்குள்ளும், அவர்கள் இருக்கும் சமுதாயத்திற்குள்ளும் ஒருங்கிணைவதால் பலனடைகிறார்கள்.*

நீதித்துறை அதிகாரம்
சட்டங்களின் அர்த்தத்தை எடுத்துரைத்து, சட்டங்களை ;சயல்முறைப்படுத்துவதற்கான அதிகாரம், அரசியல் சாசனத்தின் கீழ்வரும் மூவகை அதிகாரங்களில் ஒன்று
*அவுஸ்திரேலியாவில், அதிகாரம் நீதிமன்றங்களின் கையில் உள்ளது.*

சட்டமியற்றும் அதிகாரம்
சட்டங்களை இயற்றவும், சட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குமான அதிகாரம், அரசியல் சாசனத்தினால் வழங்கப்படும் மூன்று அதிகாரங்களில் ஒன்று
*அரசியல் சாசனத்தின்படி சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு.*

சுதந்திர உரிமைகள்
தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் சுயசார்பு
*நமது ஜனநாயக சமூகத்தில் மக்களுக்கு பேச்சுச் சுதந்திரம், கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம், சமய சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் ஆகியவை உண்டு. இச்சுதந்திர உரிமைகளை நாம் மதித்துப் பேணுகிறோம்.*

குற்றவியல் நடுவர்
கீழ் நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி
*குற்றவியல் நடுவர் திருடனை குற்றவாளி எனக் கண்டு சிறைக்கு அனுப்பினார்.*

தோழமை
மற்றவருக்கு உதவி செய்வது மற்றவரிடமிருந்து உதவி பெறுவது, குறிப்பாக கஷ்டகாலங்களில்
*எனது கார் கெட்டுப்போய் நின்றபோது, மற்ற ஓட்டுநர்கள் தோழமை உணர்வில் என் காரைத் தள்ள உதவினர்.*

தேசிய கீதம்
தேசியப் பாடல்
*'அட்வான்ஸ் அஸ்ட்ராலியா ஃபெயர்' என்பது அவுஸ்திரேலியாவின் தேசிய கீதமாகும்.*

பாராளுமன்ற ஜனநாயகம்
பிரசைகளால் வழக்கமாகப் பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதை அடிப்படையாய்க் கொண்ட அரசாங்க முறை
*பாராளுமன்ற ஜனநாயக முறையில் தாம் விரும்பும் பிரதிநிதிகளுக்கு மக்கள் வாக்களிப்பர்.*

அரசியல் கட்சி
நாடு எப்படி ஆளப்படவேண்டும் என்பது பற்றி ஒரே மாதிரியான கருத்துக்களைக்கொண்ட மக்களது குழு
*அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் காலம் தவறாது ஒன்று கூடிச் சந்திப்பர், உதாரணத்திற்கு, பொதுப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது எப்படி என்பது குறித்து கலந்துரையாடுவதற்கு.*

இனவெறி
இது, ஒருவரின் பால், அவரது இனம், நிறம், தேசிய இனம், அல்லது பூர்வீக மூலம் காரணமாக, தப்பபிப்பிராயம், பாகுபாடு, துன்புறுத்தல் அல்லது வெறுப்பு காண்பிப்பதாகும்.
*இனவெறியானது, சட்டத்திற்கு எதிரானவையாகும், அதோடு அவற்றைக் காவல்துறையினரிடம் புகார் தெரிவிக்க வேண்டும். புகார்களை அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்திடம் செய்யலாம்.*

கருத்துக்கணிப்பு
முன்மொழியப்பட்டுள்ள அவுஸ்திரேலிய அரசியல் சாசன மாற்றத்தின் மீது அனைத்து வாக்காளர்களும் வாக்களித்தல்
*1967-ஆம் ஆண்டு நடந்த கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் பூர்வீக அவுஸ்திரேலியரையும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென மக்கள் வாக்களித்தனர்.*

பிரதிநிதி
மற்றவர் சார்பாகப் பேசுபவர் அல்லது செயலாற்றுபவர்
*எனது உள்ளூர் நகரவைப் பிரதிநிதிக்கு என்னுடைய கருத்து பிடித்திருந்தது, அதை அவர் நகரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.*

மரியாதை

ஒருவரை ஒரு மனிதனாக அல்லது அவர்கள் எடுக்கும் ஒரு முடிவைப் பரிசீலிப்பதைக் காண்பியுங்கள்
*எமிலி புத்த மதத்திற்கு மாறும் முடிவை, அவளது குடும்பத்தினர் மதித்ததால், அவளுக்கு மகிழ்ச்சி.*

சட்டத்தின் ஆட்சி

குடிமக்களும் அரசாங்கமுமாகிய எல்லோரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்
*அவுஸ்திரேலியாவில் இருக்கும், பிரதமர் உள்ளிட்ட, ஒவ்வொருவரும், சட்டத்தின் ஆட்சியின் கீழ் அனைத்து அவுஸ்திரேலியச் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டவர்கள்.*

செர்வீசஸ் அவுஸ்திரேலியா

இது, பல்வேறு விதமான சுகாதார, சமுதாய மற்றும் நலவாழ்வுப் பணப்பட்டுவாடாக்கள் மற்றும் சேவைகளை, மெடிக்கேர், சென்டர்லிங்க் மற்றும் சைல்டு சப்போர்ட் வாயிலாகக் கொடுத்துதவுகிறதோர் அவுஸ்திரேலிய அரசாங்க முகமையாகும்.
*செர்வீசஸ் அவுஸ்திரேலியா, துணைபுரியும் சேவைகளை, சென்டர்லிங்க் மற்றும் மற்ற சேவைகள் வாயிலாகக் கொடுத்துதவுகிறது.*

இரகசிய வாக்களிப்பு

குறிப்பிட்ட முறையில் ஓட்டு செலுத்துமாறு வாக்காளர்களை மற்றவர்கள் கட்டாயப்படுத்தாத வகையில் மக்கள் மறைவாக வாக்களிக்கும் முறை
*இரகசிய வாக்களிப்பு முறையில் நீங்கள் வாக்குச் செலுத்தும்போது வேறு யாரும் பார்க்க இயலாது.*

சமயசார்பற்ற

சமயத்திற்கு அப்பாற்பட்டது
*சமயசார்பற்ற சமூகத்தில் அதிகாரப்பூர்வமான சமயம் எதுவும் கிடையாது.*

தன்னிறைவு

மற்றவர்களின் உதவியின்றி, உங்களது சுய தேவைகளைச் சமாளிக்க இயலுவது.
*வேலையிருந்தது என்பதால் அவனால் அவனுக்கான உணவை வாங்கிக் கொண்டு, அவனது வாடகையைச் செலுத்த முடிந்தது. அவன் தன்னிறைவு பெற்றவனாக இருந்தான்.*

அமைத்தல்

நிர்மாணித்தல், ஸ்தாபித்தல், துவக்குதல்
*முதல் குடியேற்றத்தை ஆளுநர் ஃபிலிப் நியு+ சௌத் வேல்ஸ்- இல் அமைத்தார்.*

ஷயர்

உள்ளூர் நிர்வாகப் பகுதி
*எனது ஷயர் பகுதியில் உள்ள சாலைகள் பாதுகாப்பானவை.*

சமூகப் பாதுகாப்பு

வேலையில்லாதவர்கள், உடலியலாமை உடையவர்கள், வயதானவர்கள் மற்றும் தேவையிலிருப்போருக்கு உதவுவதற்கென வழங்கப்படும் அரசு ஓய்வூதியங்கள் அல்லது ஆதாயங்கள்
*டிராங் தனது வேலையை இழந்தபோது, சமூகப் பாதுகாப்பு உதவிக்கென விண்ணப்பிக்க வேண்டியிருந்தது.*

அவுஸ்திரேலிய வரியிறுப்பு அலுவலகம் (ATO)

இது, அவுஸ்திரேலியர்களுக்கான சேவைகளுக்கு துணைபுரிந்து, நிதியளிக்கிற வரி மற்றும் பணி ஓய்வு அமைப்புகளை மேலாண்மை செய்கிறதோர் அவுஸ்திரேலிய அரசாங்க முகமையாகும்.
*ஒவ்வொரு ஆண்டும், பெரும்பாலான அவுஸ்திரேலியர்கள், அவுஸ்திரேலிய வரி வசூல் அலுவலகத்திற்கு வரிக் கணக்கை சமர்ப்பிக்கிறார்கள்.*

மதிப்புகள்

எது சரி, எது தவறு என்பதை முடிவு செய்வதற்கும், பல்வேறு விதமான சூழல்களில் எவ்விதம் செயல்படுவது எனவும் ஒருவருக்கு உதவும் கொள்கை
*அவுஸ்திரேலியாவிற்கு பகிர்ந்து கொண்ட மதிப்புகள் தொகுதியொன்று உள்ளது, அதை நாம் அவுஸ்திரேலிய மதிப்புகள் என்கிறோம்.*

சுயவிருப்புத்தொண்டர்

ஒரு நபருக்கோ அல்லது அமைப்புக்கோ ஊதியம் எதுவும் எதிர்பார்க்காமல் தனது சேவையை அளிப்பவர்
*ராஸா மற்றவரது இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்கு ஆங்கிலம் சொல்லித்தரும் சுயவிருப்பத்தொண்டராவார்.*

# சோதனைக்கான பயிற்சி வினாக்கள்

## அவுஸ்திரேலியாவும் அதன் மக்களும்

1. 'அன்ஸக்' தினத்தைக் கொண்டாட நாம் செய்வதென்ன?

    அ. 1 ஆம் உலகப் போரின் போது, கலிபொலி, துருக்கியில் அவுஸ்திரேலிய, நியு+ஸிலாந்து இராணுவ வீரர்கள் வந்திறங்கியமை

    ஆ. பிரிட்டானியப் பேரரசிலிருந்து முதல் சுதந்திரக் குடிகளது வருகை

    இ. ஸிட்னி வளைகுடாவில் முதலாம் கப்பல் தொகுதி வந்திறங்கியமை

2. அவுஸ்திரேலிய அபோரிஜினிகள் கொடியில் உள்ள நிறங்கள் யாவை?

    அ. கருப்பு, சிவப்பு மற்றும் மஞ்சள்

    ஆ. பச்சை, வெள்ளை மற்றும் கருப்புை

    இ. நீலம், வெள்ளை மற்றும் பச்சை

3. பொதுநல அரசின் சின்னம் என்ன?

    அ. தேசிய கீதம்

    ஆ. அவுஸ்திரேலியாவின் தேசிய மலர்

    இ. இது, அவுஸ்திரேலியாவின் அதிகாரப்பூர்வமான சின்னமாகும், இது பொதுநல அரசை குறிக்கும்

4. 1901-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் நடந்த நிகழ்ச்சி என்ன?

    அ. கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலிய அரசியல் சாசனம் மாற்றப்பட்டது

    ஆ. தனித்தனியாக இருந்த குடியேற்றங்களை ஒன்றிணைத்து, காமன்வெல்த் ஆஃப் அவுஸ்திரேலியா என்று சொல்லும், மாகாணங்களின் கூட்டமைப்பாக்கினார்கள்.

    இ. அவுஸ்திரேலிய-நியூஸிலாந்து இராணுவப்படை அமைக்கப்பட்டது

5. மேற்கு அவுஸ்திரேலியாவின் தலைநகரம் எது?

    அ. பிரிஸ்பேன்

    ஆ. கேன்பெர்ரா

    இ. பெர்த்

## அவுஸ்திரேலியாவின் ஜனநாயக நம்பிக்கைகள், உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள்

6. கீழ்வருவனவற்றில் எது பேச்சு சுதந்திரத்துக்கு உதாரணமாகும்?

    அ. அரசின் நடவடிக்கைகளுக்கு மக்கள் அமைதியான முறையில் எதிர்ப்பு தெரிவிக்கலாம்.

    ஆ. நீதிமன்றத்தில் ஆண்களும் பெண்களும் சமமாக நடத்தப்படுவர்

    இ. எச்சமயத்தையும் பின்பற்றாதிருக்கும் உரிமை அவுஸ்திரேலியருக்குண்டு

7. கீழ்வரும் கூற்றுகளில் எது அவுஸ்திரேலிய அரசாங்கத்தைப் பற்றி சரியானதாகும்?

    அ. சில மதங்களை அரசு அனுமதிப்பதில்லை

    ஆ. அவுஸ்திரேலியாவில் இருக்கிற அரசாங்கம் மதசார்பற்றதாகும்

    இ. மதச் சட்டங்கள் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்றன

8. கீழ்வருவனவற்றுள் எது அவுஸ்திரேலியாவிலுள்ள சமத்துவத்திற்கு உதாரணமாகும்?

அ. ஒவ்வொருவரும் ஒரே சமயத்தைப் பின்பற்றுகின்றனர்

ஆ. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமைகள் இருக்கின்றன.

இ. ஒவ்வொருவரும் ஒரே அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள்

9. கீழ்க் காணப்படும் விடயங்களில் எது 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய அவுஸ்திரேலியர்களது கடமையாகும்?

அ. உள்ளூர் நகரவைக் கூட்டங்களுக்குச் செல்வது

ஆ. மத்திய மற்றும் மாகாண அல்லது பிரதேசத் தேர்தல்களிலும், தீர்மானத்திலும் வாக்களிக்க

இ. செல்லுபடியாகக்கூடிய அவுஸ்திரேலியக் கடவுச்சீட்டு ஒன்றை வைத்திருப்பது

10. கடவுச்சீட்டுகளைக் குறித்த கீழ்வரும் கூற்றுகளில் எது சரியானதாகும்?

அ. அவுஸ்திரேலியப் பிரசைகள் அவுஸ்திரேலியக் கடவுச் சீட்டிற்கென விண்ணப்பிக்கலாம்

ஆ. நிரந்தரக் குடிகள் அவுஸ்திரேலியக் கடவுச்சீட்டொன்றை வைத்துக்கொள்ளலாம்

இ. அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பி வர, அவுஸ்திரேலியக் குடிமக்களுக்கு கடவுச்சீட்டும் விசாவும் தேவை

## அவுஸ்திரேலிய அரசாங்கமும் அதன் சட்டங்களும்

11. அவுஸ்திரேலியத் தேர்தல்களில் வாக்களிப்பது குறித்த கீழ்வரும் கூற்றுகளில் எது சரியானது?

அ. எந்த வேட்பாளருக்கும் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாக்களிக்கும் உரிமை மக்களுக்கு உண்டு

ஆ. கையைக் காட்டுவதன் மூலமாக வாக்களிக்கப்படுகிறது

இ. வாக்குச்சீட்டின் மீது மக்கள் தம் பெயரைக் கட்டாயம் எழுதவேண்டும்

12. அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கான அடிப்படை விதிமுறைகளை எடுத்துக்காட்டும் சட்டப்பூர்வமான ஆவணத்தின் பெயர் என்ன?

அ. அவுஸ்திரேலியக் கூட்டரசு

ஆ. அவுஸ்திரேலியப் பொதுநல அரசு

இ. அவுஸ்திரேலிய அரசியல் சாசனம்

13. கருத்துக்கணிப்பு என்றால் என்ன?

அ. அரசாங்கத்தை மாற்றுவதற்கான ஒரு வாக்கெடுப்பு

ஆ. அவுஸ்திரேலிய அரசியல் சாசனத்தை மாற்றுவதற்கான ஒரு வாக்கெடுப்பு

இ. பிரதமரை மாற்றுவதற்கான வாக்கெடுப்பு

14. சட்டங்களின் அர்த்தத்தை விளக்கி சட்டங்களை செயற்படுத்தும் அதிகாரம் அரசின் எந்த அங்கத்திற்கு உண்டு?

அ. சட்டம் இயற்றும் அங்கம்

ஆ. நிர்வாக அங்கம்

இ. நீதித்துறை

15. கீழ்வருவனவற்றுள் எது கவர்னர்ஜெ னரலின் பங்காகும்?

அ. மாநில முதல்வர்களை நியமிப்பது

ஆ. அவுஸ்திரேலிய பாராளுமன்றம் நிறைவேற்றுகிற அனைத்து மசோதாக்களிலும் கையொப்பமிடுதல்

இ. நாட்டின் தலைமை அதிகாரியை நியமனம் செய்வது

## அவுஸ்திரேலிய மதிப்புகள்

16. கருத்து சுதந்திரம் குறித்த அவுஸ்திரேலிய மதிப்புகளைப் இவற்றில் எந்தக் கூற்று மிகச்சிறப்பாக விளக்கிச் சொல்லும்?
    - அ. சட்டத்திற்குட்பட்டு ஒவ்வொருவரும் அமைதியாக தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்லாம்
    - ஆ. என்னிலிருந்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும்
    - இ. அங்கீகரித்த தலைப்புகளில் மட்டுமே விவாதிக்க முடியும்

17. அவுஸ்திரேலியாவில் உள்ளவர்கள், ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமா?
    - அ. அவுஸ்திரேலியாவிலுள்ளவர்கள், அவர்கள் வசிக்கும் அயலகப் பகுதிகளில் எந்த மொழியை மிகப் பொதுவாகப் பேசுகிறார்களோ அந்த மொழியையே பேச வேண்டும்
    - ஆ. அவுஸ்திரேலியாவில் எந்தவொரு குறிப்பிட்ட மொழியையும் கற்றுக்கொள்வதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை
    - இ. ஆம், அவுஸ்திரேலியாவின் தேசிய மொழி ஆங்கிலமேயாகும், அதோடு இது கல்வி, வேலை பெற்றுக்கொள்ளவும், சமுதாயத்தை ஒருங்கிணைக்கவும் உதவுகிறது

18. அவுஸ்திரேலியாவில், உங்களை அவமானப்படுத்தி விட்டார்கள் என்பதற்காக, உங்களால் ஒரு நபர் அல்லது ஒரு குழுவிற்கு எதிராக வன்முறையைத் தூண்ட முடியுமா?
    - அ. முடியும், உங்களுக்கு அந்த வன்முறையை முன்னெடுத்து நடத்த எண்ணமில்லை என்றால்
    - ஆ. முடியாது, அது அவுஸ்திரேலிய மதிப்புகளுக்கும், சட்டங்களுக்கும் எதிரானது
    - இ. சில நேரங்களில், உங்களை மிகவும் வெறுப்பேற்றியதாக நினைத்தால்

19. மக்கள், மற்றவர் கூற்றை ஒப்புக்கொள்ளாத போதும், ஒருவரை ஒருவர் சகித்துக்கொள்ள வேண்டுமா?
    - அ. ஒருவரை ஒருவர் அவமானப்படுத்துவது சட்டத்திற்கு எதிரானது
    - ஆ. கூடாது, ஒருவர் சொல்வதை ஒருவர் ஏற்றுக்கொள்கிற பட்சத்தில் மட்டுமே, அவர்களை அவர்கள் மரியாதையோடு நடத்த வேண்டும்
    - இ. ஆம், சமாதானமான முறையில் மாற்றுக்கருட்துக்களைத் தெரிவிபட்து, பரஸ்பர மரியாதை தொடர்பான அவுஸ்திரேலிய மதிப்புகளைப் பிரதிபலிக்கிறது

20. பின்வருவதில் எது, அவுஸ்திரேலிய சமுதாயத்திற்குப் பங்களிப்பதற்கானதோர் உதாரணமாகும்?
    - அ. நற்பணி இயக்கம் ஒன்றுக்குத் தன்னார்வத் தொண்டு புரிவது அல்லது நிதி திரட்டுவது என்பது, நமது சமுதாயத்தைப் பலப்படுத்துவதற்கானதோர் பெரும் சந்தர்ப்பமாகும்
    - ஆ. மற்றவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள நான் எந்த முயற்சியையும் எடுக்கக் கூடாது
    - இ. அவுஸ்திரேலியா ஒரு சுதந்திர நாடாகும், அவுஸ்திரேலியர்கள் சமுதாயத்திற்குப் பங்களிக்கக் கூடாது

### பதில்கள்

1அ, 2அ, 3இ, 4ஆ, 5ஆ, 6அ, 7ஆ, 8ஆ, 9ஆ, 10அ, 11அ, 12இ, 13ஆ, 14இ, 15ஆ, 16அ, 17இ, 18ஆ, 19இ, 20ஆ



# சோதனைக்குரிய பகுதி முடிவடைகிறது